Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இலவசம்! இலவசம்!! இலவசம்!!!

பாடசாலை மாணவர்களுக்கான DSI சப்பாத்துக்கள் (SHOES) ஒவ்வொன்றிற்கும் ஒரு றபர் செருப்பு இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்

DSI பாதணிகளின்

யாழ்.குடாநாட்டுக்கான ஏக விநியோகஸ்தர்கள்

SUPER SHOES

சுப்ப சூஸ்

இல.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-414)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 21 ஆம் நாள், (05.01.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ் : 96



குருநகர் ஐந்துமாடிக் கட்டட வீதியில் காணப்பட்ட முட்கம்பித் தடுப்புகள் அகற்றப்பட்டு வீதி மீண்டும் போக்குவரத்துக்கு தயாராக்கப்படுகிறது.

# குருநகர் தண்ணீர்த் தாங்கி வீதி திறக்க படையினர் தொடர்ந்தும் அனுமதி மறுப்பு

## ஒப்புக்கொண்டவற்றில் இரு வீதிகள் மட்டுமே திறக்கப்படுமாம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் தண்ணீர்த்தாங்கி வீதியால் மீனவர்கள் கடலுக்குச் சென்று கடற்தொழிலில் ஈடுபட இராணுவத்தினர் அனுமதி வழங்க மறுத்துள்ள அதேவேளை, குருநகர் சீநோர் தொழிற்சாலைக்கு அருகிலுள்ள வீதியையும் தொடர்மாடிக்கு அருகிலுள்ள வீதியையும் மீனவர்கள் பயன்படுத்த அனுமதித்துள்ளனர்.

அமைச்சர் மகேஸ்வரன் 512வது படைத்தளபதி பிரிகேடியர் ரி.ரி.சில்வாவுடன் நேற்றுக் காலை 11.30 மணியளவில் குருநகர் கடற்கரையோரத்திற்குச் சென்று பார்வையிட்டதுடன், குருநகர் மக்களுடன் கலந்துரையாடினார். அண்மையில் அமைச்சர் மிலிந்த மொறகொட, அமைச்சர் மகேஸ்வரன் மற்றும் யாழ்.தளபதி சரத் பொன்சேகா ஆகியோர் குருநகருக்கு விஜயம் செய்தபோது- மீனவர்கள் கடற்தொழிலுக்குச் செல்வதற்கு மேலும் நான்கு பாதைகளைத் திறக்க படைத்தரப்பு இணங்கியிருந்தது. இதன்படி பாதைகளைத் தெரிவுசெய்து திறப்பதற்கே- நேற்று அமைச்சர் மகேஸ்வரனும், பிரிகேடியர் ரி.ரி. சில்வாவும் குருநகருக்கு விஜயம் செய்தனர். குருநகரிலுள்ள சீநோர் தொழிற்சாலைக்கு அருகாமையிலுள்ள வீதியையும், தொடர்மாடிக்கு அருகாமையிலுள்ள வீதியை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டை அச்சுறுத்தும் வைரஸ் காய்ச்சல்

# அரச அதிபர் தலைமையில் செயலணிக்குழு

விண்ணாணம் விநாசியர்



றடாரையும் பூட்டி வச்சுக்கொண்டு வெளிச்சத்தையும் தேடுகினமோ...

## முடுக்கி விடப்படுகிறது தடுப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடாநாட்டில் மிகத் தீவிரமாகப் பரவிவரும் இனந்தெரியாத வைரஸ் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கு, அரச அதிபர் தலைமையில் மாவட்ட மட்டத்திலும் பிரதேச செயலர் மட்டங்களிலும் விசேட நடவடிக்கைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.**

இவ்வைரஸ் காய்ச்சலின் தாக்கம் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்வதைத் தொடர்ந்து மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக, யாழ். செயலகத்தில் நேற்றுக்காலை விசேட கூட்டம் ஒன்று நடைபெற்றது. யாழ்.அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில்- பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உட்படப் பல சுகாதார, மருத்துவ அதிகாரிகள் கலந்து கொண்டனர். தற்போதைய நிலையில் உடனடியாக மேற்படி வைரஸ் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கும், காய்ச்சல் பரவுவதைத் தடுத்து நிறுத்துவதற்கும் அனைவரும் ஒன்றிணைந்து போர்க்கால அடிப்படையில் செயற்படவேண்டும் என்று யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

இதற்காக யாழ்.மாவட்ட மட்டத்

(10ஆம் பக்கம் பார்க்க)

# அரசு - புலிகள் குழுவினர் ஒரே விமானத்தில் பயணம்

(கொழும்பு)

தாய்லாந்தில் நடைபெறவுள்ள அடுத்த சுற்று சமாதானப் பேச்சுக்களுக்காக, அரசு - புலிகள் தரப்புப் பிரதிநிதிகளில் ஒரு தொகுதியினர் நேற்றுக் காலையில் புறப்பட்டுச் சென்றனர்.

அமைச்சர் மிலிந்த மொறகொட, சமாதான செயலகப் பணிப்பாளர் பேனாட் குணதிலக, தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், கேணல் கருணா ஆகியோர் நேற்றுக் காலை விமானம் மூலம் தாய்லாந்துக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

இதேவேளை -அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம் மற்றும் ஜி.எல். பீரிஸ் ஆகியோர் இன்று தாய்லாந்துக்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளனர் எனவும் தெரியவருகிறது.

# வைரஸ் கிருமியின் மாதிரி களுபோவிலவில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பரவும் காய்ச்சலுக்குக் காரணமான வைரஸ் மாதிரிகள் களுபோவில மருத்துவமனையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்படி காய்ச்சலை ஏற்படுத்தும் வைரஸ் கிருமியின் வகை என்ன என்பது குறித்தும், இவற்றுக்கு எதிராக செயற்படக் கூடிய வக்சீன் வகை எது என்பது குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் மருத்துவப் பேராசிரியர்களும், இவ்வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரிகளும் மேற்படி ஆய்வு முயற்சியை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை- குடாநாட்டில் பரவி

(10ஆம் பக்கம் பார்க்க)

## சிறாணுக்கு ஜப்பான் 35 மில்லியன் உதவி

(கொழும்பு)

கிளிநொச்சியில் செயற்படும், வட-கிழக்குக்கான அவசர மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு பணிகளுக்கான நடவடிக்கைச் செயலகத்துக்கு, ஜப்பானிய அரசு நிதியுதவி வழங்கியுள்ளது.

மேற்படி செயலகம் செயற்படுவதற்கான ஆரம்ப மூலதனச் செலவுக்காகவே ஜப்பானிய அரசு நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சங்கரிக்கு உபசபாநாயகர் பதவி கூட்டமைப்புக்குள் பலத்த அதிருப்தி

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரிக்கு உபசபாநாயகர் பதவி வழங்கப்படவிருப்பதைத் தொடர்ந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பல்வேறு மட்டங்களில் பெரும் குழப்ப நிலை உருவாகியுள்ளது.

கூட்டமைப்புக்குள்ளும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள்ளும் மேற்படி நியமனம் தொடர்பாக பெரும் அதிருப்தி நிலை தோன்றியுள்ளது. பல சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்படி நியமனத்தைக் கடுமையாக ஆட்சேபிக்கின்றனர்.

இன்று அல்லது நாளை இந்தியாவில் இருந்து நாடு திரும்பவிருக்கும் ஆனந்தசங்கரிக்கு உப சபாநாயகர் பதவியை வழங்குவதற்கு சகல ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

# இரவில் வெளிச்சமின்றி மீன்பிடிக்க வேண்டாம்!

## கடற்படைப் பேச்சாளர் கூறுகின்றார்

வடக்கு-கிழக்கு கடற்பகுதியில் இரவில் மீன்பிடித்தலில் ஈடுபடும் வள்ளங்களில் வெளிச்சம் போடப்பட்டிருக்க வேண்டும் என, கடற்படைப் பேச்சாளர் கப்டன் ஏ.ஆர்.அமரசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்குக் கடலில் கடந்த 31 ஆம் திகதி வெளிச்சமின்றி மீன்பிடித்துக் கொண்டிருந்த படகு ஒன்றை கடற்படைப் படகு மோதியதன் பின்னரே இவ்வறிவித்தல் விடுக்கப்படுவதாக கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இரவில் வெளிச்சமின்றி மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் எனவும் அவர் மீனவர்களிடம் கேட்டுக் கொண்டார்.

# மட்டு. புலிகளின் அலுவலகம் மீது நள்ளிரவில் திடீர் சுற்றிவளைப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில், இராணுவப்புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் நேற்று முன்தினம் மாலை இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டதையடுத்து - கல்லடியிலுள்ள புலிகளின் அரசியற்துறை அலுவலகத்தை, படையினரும் பொலிசாரும் இணைந்து சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர்.


இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மட்டக்களப்பு 233வது படைப் பிரிவு புலனாய்வுப்பிரிவில் பணியாற்றும் லான்ஸ்கோப்ரல் எஸ். புலேந்திரராசா என்பவர், நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் புளியந்தீவிலிருந்து கல்லடி நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது கடத்திச்செல்லப்பட்டார்.

இதையடுத்து, நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில், இராணுவப் புலனாய்வுத்துறையினர், விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து கல்லடியிலுள்ள புலிகளின் அரசியற்துறை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நியுசிலாந்திடம் இந்திய அணி ஒருநாள் தொடரையும் இழந்தது


ஆட்டமிழக்கிறார் ட்ராவீட்

(குயீன்ஸ் ரவுண்)

இந்தியா - நியுசிலாந்து அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெற்ற நான்காவது ஒரு நாள் போட்டியிலும் தோல்வியுற்ற இந்திய அணி தொடரையும் இழந்தது.

நேற்று குயீன்ஸ் ரவுணில் ஆரம்பமான போட்டியில், இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. காயம காரணமாக ஒரு நாள் போட்டிகளில் விளையாடாமல் இருந்த நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் நேற்றைய போட்டியிலும் விளையாடவில்லை.

43.4 ஓவர்களில் இந்திய அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 122 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. ஷேவாக் 23 ஓட்டங்களையும், ட்ராவிட் 18 ஓட்டங்களையும் யுவராஜ் சிங் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில்- நியூசிலாந்து அணி வீரர் அடம்ஸ், 8.4 ஓவர்களில் 22 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி, 25.4 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து வெற்றி இலக்கை எட்டியது. அணித் தலைவர் பிளெமிங் 47 ஓட்டங்களையும் சின் கிளயர் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் இந்திய வீரர் ஸ்ரீநாத் மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்தப் போட்டியிலும் இந்திய அணி தோல்வி கண்டதால் 7 போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடரில் 4 போட்டிகளில் தோல்வியுற்று தொடரை நியூசிலாந்திடம் அது இழந்தது.

# பாகிஸ்தானுடனான டெஸ்ட் போட்டி தென்னாபிரிக்கா 620 ஓட்டங்கள்


தௌபீக் உமர்

(கேப்ரவுண்)

தென்னாபிரிக்க-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் கேப்ரவுணில் நடைபெறும் டெஸ்ட் போட்டியில்- தென்னாபிரிக்க அணி 7 விக்கெட் இழப்புக்கு 620 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தினை இடைநிறுத்திக் கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத தாடத தொடங்கிய பாகிஸ்தான் அணி, நண்பகல் இடைவேளை வரை 4 விக்கெட் இழப்புக்கு 218 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பாகிஸ்தான் வீரர் தௌபிக் உமர் 117 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார்.

# இங்கிலாந்து 217 ஓட்டங்களால் முன்னணியில்!


ஹொகாட்

(சிட்னி)

ஆஷஸ் கிண்ண டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டியின் மூன்றாவது நாளான நேற்று, அவுஸ்திரேலிய அணியைவிட இங்கிலாந்து 217 ஓட்டங்களால் முன்னிலையில் இருந்தது.

அவுஸ்திரேலிய அணி, முதல் இன்னிங்ஸில் 363 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தது. நேற்றைய போட்டியில் அடம் கில்கிறிஸ்ட் 133 ஓட்டங்களை 121 பந்துகளில் பெற்றார்.

இரண்டாவது இன்னிங்ஸை ஆடத தொடங்கிய இங்கிலாந்து அணி, ஆட்டம் நிறுத்தப்பட்டபோது- இரண்டு விக்கெட்டுகளை இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இங்கிலாந்து வீரர்கள் மைக்கல் வோன் 113 ஓட்டங்களுடனும் நசார் ஹூசேன் 34 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். மைக்கல் வோன்- ஆஷஸ் தொடரில் பெற்ற மூன்றாவது சதம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.


## பதவி வெற்றிடம்
## (UNHCR - Micro Project)

யாழ்.செயலக யூ.என்.எச்.சி.ஆர். நுண்கருத்திட்டப்பிரிவில் உள்ள பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

*1. உதவித்திட்ட அலுவலர் (வெளிக்களம்/நிர்வாகம்)- (பதவி 02)*
- a. ஆகக்குறைந்தது க.பொ.த. (உயர் தரம்) சித்தி.
- b. திட்டங்கள் தயாரித்தல், நடைமுறைப்படுத்தல், முகாமை, நிர்வாகம் செய்தலில் ஆகக்குறைந்தது 10 வருட அனுபவம்.
- c. திட்ட அறிக்கைகள், கடிதங்கள், முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றை கணனியில் பொறிக்கும் தகைமை உடையவராய் இருத்தல் வேண்டும்.

*2. தொழில்நுட்ப உதவியாளர் - (பதவி 03)*
- a. ஆகக்குறைந்தது க.பொ.த. (சாதாரணதரம்) சித்தி.
- b. தேசிய தொழில்நுட்ப டிப்புளோமா அல்லது அதற்கு சமமான தகைமை.
- c. அரச/கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றிய அனுபவம், மதிப்பீட்டு, தொழில்நுட்ப அறிக்கை மற்றும் வேலை மேற்பார்வை போன்றவற்றில் ஆகக்குறைந்தது 05 வருட அனுபவம்.

*3. சமூகசேவை உதவியாளர் (பதவி 03)*
- a. ஆகக்குறைந்தது க.பொ.த. (உயர்தரம்) சித்தி.
- b. சமூக அபிவிருத்தித்திட்ட வேலைகளில் ஆகக்குறைந்தது 03 வருட அனுபவம்.
- c. 35 வயதிற்கு உட்பட்டவர்.

*4. லிகிதர்/நிர்வாகம்/கணக்கு/ஆவணப்படுத்தல் (பதவி 03)*
- a. ஆகக்குறைந்தது க.பொ.த. (உயர்தரம்) சித்தி.
- b. குறைந்தது 05 வருடம் அரச, கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றிய அனுபவம்.
- c. தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கடிதத்தொடர்பு செய்யக்கூடிய ஆற்றல், கோவைகள், கணக்குப்பதிவேடுகள் பேணல், மற்றும் கணக்கு வைக்கும் முறைகளில் அனுபவம்.

*5. சாரதி (பதவி 01)*
- a. அடிப்படை கல்வித்தகைமை (குறைந்தது 8 ஆம் தரம்சித்தி).
- b. கனரக வாகனம் செலுத்தும் தகைமையுடன் சாரதி அனுமதிப் பத்திரம் இருத்தல்.

குறிப்பு:

*1 தொடக்கம் 4 வரையான பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் ஆங்கில அறிவு உள்ளவராயும், கணனிக் கல்வித் தகைமை உள்ளவராயும், மோட்டார் வண்டி ஓட்டக்கூடியவராயும், சாரதி அனுமதிப் பத்திரத்தை வைத்திருப்பவர்களாகவும் இருத்தல் அவசியம்.*

*உயர் தராதரம் உடைய விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.*

03.01.2003

செ.பத்மநாதன்
அரச அதிபர்,
யாழ்.செயலகம்

சுய விபரங்களுடன் விண்ணப்பங்கள் 15-01-2003 திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பின்வரும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

அரச அதிபர்,
யூ.என்.எச்.சி.ஆர். (நுண்கருத்திட்டம்)
செயலகம், யாழ்ப்பாணம்.

(சி-446)


## இன்றைய நாள் இனிய நாள்

**05-01-2003 - ஞாயிற்றுக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- திருமண முயற்சியில் வெற்றி கிடைக்கும், வியாபாரிகளுக்கு எதிர்பாராத பொருள் வரவு, பெண்களுக்கு மகிழ்ச்சியான நாள் |
| இடபம் | :- தலைவலி, யோசனை, அதிக அலைச்சல், குடும்பத்தில் ஒற்றுமை குறைவு. |
| மிதுனம் | :- அதிக அலைச்சலைக் கொடுத்து நினைத்த காரியம் வெற்றி பெறும், குடும்ப சுகம், மகிழ்ச்சி. |
| கர்க்கடகம் | :- உற்சாகமின்மை, தொழில் மந்தநிலை, பொருள் இழப்பு, மனைவியுடன் கருத்துமுரண்பாடு. |
| சிங்கம் | :- களவுகொடுத்தல், பொருட்சேதம், குடும்ப மகிழ்ச்சி, அந்நியரால் உதவி. |
| கன்னி | :- பிரயாணத்தால் நன்மை, யாத்திரை, பணவரவு, மகிழ்ச்சி. |
| துலாம் | :- வாகனநஷ்டம், அலைச்சல், உடற்சோர்வு. |
| விருச்சிகம் | :- களஸ்திரசுகம், மனப்பயம், நன்மதிப்பு, தேகமெலிவு. |
| தனு | :- விஷத்தால் பயம், புத்திரரால் மகிழ்ச்சி, தூக்கம் குறைவு. |
| மகரம் | :- திருடர் பயம், மனமகிழ்ச்சி, பொருள் வரவு. |
| கும்பம் | :- எதிர்பாராத வெற்றி, உடற்சோர்வு, குடும்பத்தில் கலகம். |
| மீனம் | :- அரச உதவி கிடைக்கும், பிரயாணம், நினைத்தகாரியம் வெற்றி. |

பிரபல சோதிடர்
எஸ்.குகநேசன்


ராஜா
யாழ்ப்பாணம்.



முரளி, ராதிகா சௌத்திரி, வடிவேல், மணிவண்ணன் நடித்த
சுந்தரா டிராவல்ஸ்
10.30, 2.30, 6.00
(சி-398)

நிறைஞ்சனாஸ் சங்கானை
அஜித், மீனா நடித்த
வில்லன்
11.00, 2.45, 6.00 (பு.நே.)
(சி/397)

அதிரடி விலைக்குறைப்பு
மெது வாடிக்கையாளர்களுக்கும்
அனைவருக்கும் மகிழ்வுடன்
அறியத்தரும் செய்தி
06-01-2003 முதல் ஒரு SAGEM
கையடக்கத் தொலைபேசியின்
விலை 7450/- மட்டும்




இறுதிச்சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்




DIAL LINKS
THE PHONE SHOP
இல. 204, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. - 2225485
(சி-447)

# உதவுவதாகக் கூட்டிச் சென்று பெண் மீது பாலியல் வல்லுறவு!

## கோண்டாவில் டிப்போ அருகே நடந்த கொடூரம்

ஈவினைப் பகுதியிலிருந்து கடந்த மாதம் காணாமற்போன இளம் யுவதி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகத் தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த மாதம் 17 ஆம் திகதி மேற்படி பெண், கோண்டாவில் பகுதியில் வைத்துப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் நாரந்தனைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். அங்கு இப்பெண் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டு, யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இவர் கடந்த 31 ஆம் திகதி அங்கிருந்து தப்பியோடிவிட்டார். கடந்த வியாழக்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக, செல்லப்பா பாபு என்ற நபர் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

இவரைச் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் நிறுத்தி மருத்துவப் பரிசோதனை அறிக்கையை எதிர்வரும் 7 ஆம் திகதி மல்லாகம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி நீதிவான் உத்தரவிட்டுள்ளார். எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. யுவதி காணாமற்போனமை தொடர்பாக நமது ஈழநாடு ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே. (78)

## மறியல் போராட்டத்தில் பாதிப்புற்ற விபரங்கள் பதிவு!

### வடமராட்சி வெகுஜன ஒன்றியம் ஏற்பாடு

நெல்லியடி ஈ.பி.டி.பி. அலுவலகத்திற்கு முன்பாகக் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற மறியற் போராட்டத்தின்போது நடத்தப்பட்ட தாக்குதலில்- பாதிக்கப்பட்டவர்களையும் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்பீடுகள் பற்றிய விபரங்களையும்- எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் வடமராட்சி வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தில் பதிவுசெய்யுமாறு ஒன்றியத் தலைவர் அறிவித்துள்ளார். மேற்படி சம்பவத்தின்போது ஏற்பட்ட இழப்புக்கள்- மற்றும் காயமடைந்தவர்கள் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாலேயே இவ்விபரங்கள் பெறப்படுவதாகத் தெரியவருகின்றது. (09)

## இளவாலையில் மெய்வல்லுநர் போட்டி

(இளவாலை)

இளவாலை புனித யூதாததேயு இளையோர் மன்றத்தினரால் நடாத்தப்படும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அருட்தந்தை றொசான் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (41)

## இசைப்பயிலகம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தினால் புதிதாக இளையோருக்கான இசைப் பயிலகம், நாளை மாலை 5 மணிக்கு மன்றக் கலைத்தூது மணிமண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.


## வட இலங்கை பத்திரிகையாளர் சங்கக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் கூட்டம் இன்று காலை 11 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளதாகச் சங்கத்தின் செயலாளர் எம்.கே.ஜீவகதாஸ் அறிவித்துள்ளார். (ச)

## தொலைக்காட்சி மூலம் ரணில் இன்று முக்கியமான உரை!

(கொழும்பு)



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு இன்று முக்கியமான உரை ஒன்றை நிகழ்த்தவுள்ளதாகத் தெரியவருகிறது. பிரதமரின் இந்த உரை தனியார் தொலைக்காட்சி ஒன்றில் இன்று இரவு இடம்பெறவுள்ளது.

சிங்கப்பூருக்குத் தனிப்பட்ட விஜயமாகச் சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பிய பின்னர், சமாதானப் பேச்சுக்கள் மற்றும் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக எழுந்துள்ள சிக்கல்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் அமைச்சர்கள், இராணுவ அதிகாரிகளுடன் விரிவான பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

தாய்லாந்தில் நாளை திங்கட்கிழமை அரசு - புலிகள் பேச்சுக்கள் ஆரம்பிக்கவுள்ள நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று நிகழ்த்தவுள்ள உரை முக்கியத்துவமானதாக அமையும் எனக் கருதப்படுகிறது.

இந்த உரையில்- சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாகவும், உயர் பாதுகாப்பு வலய மீள்குடியமர்வு குறித்தும் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு எடுத்து விளக்கலாம் எனவும் அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

## சமாதான விழிப்புணர்வுத் திட்டம் நாளை முதல் அரசு ஆரம்பிக்கிறது!

### தெற்கின் கிராமங்களை நோக்கி விஸ்தரிக்கப்படும்

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் பற்றிய விழிப்புணர்வுத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும் இத்திட்டத்தை, மேற்பார்வை செய்வதற்காக அரசாங்கம் அமைச்சர் மட்டக்குழு ஒன்றை நியமித்திருக்கின்றது.

டாக்டர் ராஜித சேனாரத்ன இதற்குத் தலைமை தாங்குவார். முதலில் நாடாளுமன்ற உறுப்பினர்களை இலக்காகக் கொண்டு செயற் படுத்தப்படும் இத்திட்டம் பின்னர், தெற்கின் ஒவ்வொரு கிராமங்களையும் நோக்கி விஸ்தரிக்கப்படவிருப்பதாகவும் அமைச்சர் சேனாரத்ன தெரிவித்தார்.

அதன்பின்னர், பொதுமக்களுக்காகக் கூட்டங்கள் நடத்தப்படும். அடுத்த மாதம் ஒவ்வொரு வாரமும் இவ்வாறான கூட்டங்கள் நடைபெறுமென்றும், அவற்றுக்குப் பிரதமர் தலைமை தாங்குவார் எனவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு சகல அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பும் பெறப்படும் என்றும் அரசாங்கத்தின் சார்பில் தெரிவிக்கப்படுகிறது.

## வேறுபாடுகள், பிரச்சினைகள் இருப்பினும் அவற்றைத் தீர்ப்பதே எங்களது இலக்கு!

### தாய்லாந்து புறப்பட முன்னர் மிலிந்த மொறகொட அறிவிப்பு

(கொழும்பு)

எங்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் வேறுபாடுகள், பிரச்சினைகள் இல்லையென்றால் நாம் பேச்சுவார்த்தை மேசைக்கு வரவேண்டிய தேவையே வந்திராது. எமது இலக்கே - இந்த வேறுபாடுகளை, பிரச்சினைகளைப் போக்குவதுதான் என, விஞ்ஞான பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்தார்.

தாய்லாந்து புறப்படுவதற்கு முன்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இவ்வாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில் - தாய்லாந்தில் கலந்துரையாடப்பட ஏராளம் விடயங்கள் இருக்கின்றன. குறிப்பாக - பாதுகாப்பு வலயத் தளர்வும், மீள்குடியமர்வும் பற்றிப் பேசுவோம். இரண்டு தரப்புமே எதனையும் பூதாகரப்படுத்தாமல் இயல்பான வகையிலேயே பிரச்சினைகளை அணுகிவருகின்றோம் என்றும், அமைச்சர் மிலிந்த மொறகொட மேலும் தெரிவித்தார்.

## வீதியில் வெடித்த பட்டாசு பதம் பார்த்தது கண்ணை!

### கடையில் தேநீர் அருந்தியவருக்கு நேர்ந்த கதி

(யாழ்ப்பாணம்)

வீதியில் வீசப்பட்ட பட்டாசு வெடித்தபோது, அதன் அடிக்கட்டை பறந்து தேநீர்ச்சாலையில் தேநீர் அருந்திக்கொண்டிருந்தவரின் கண்ணைப் பதம் பார்த்தது.

இச்சம்பவத்தில் சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த சின்னத்துரை (வயது 54) என்பவரே காயமடைந்து - யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டார்.

இதேவேளை, சாவகச்சேரி நவீன சந்தையினுள் வியாபாரிகள் மீதும் இளைஞர் கூட்டமொன்று பட்டாசுகளைக் கொழுத்தி எறியும் சம்பவமும் தினமும் நடைபெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## தமிழாசிரியர் சங்க வலய மட்டக் கூட்டம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின்- கல்வி வலயமட்ட அமைப்புக்கள் முறையே, இம்மாதம் 7 ஆம் திகதி- யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பிற்பகல் 3 மணிக்கும், 8 ஆம் திகதி- யாழ். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 3 மணிக்கும், 9 ஆம் திகதி- யாழ். மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் பி.ப. 3 மணிக்கும் நடைபெறவிருப்பதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், வடமராட்சி, வலிகாம வலயங்களைச் சேர்ந்த கிளைகளினது சகல நிர்வாகசபை உறுப்பினர்களும், தாய்ச்சங்க, மாவட்டப் பிரதிநிதிகளும் தங்களுக்குரிய வலயங்களுக்கான கூட்டம் நடைபெறும் தினத்தன்று தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த.பஞ்சலிங்கம் அழைப்பு விடுத்துள்ளார்.

இக்கூட்டங்களில் பொதுச்செயலாளர் த.மகாசிவமும் கலந்துகொள்ளவுள்ளதாக சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் மேலும் தெரிவித்தார். (லி)

## முஸ்லிம் காங்கிரஸை பிரித்த பாவம் ரணிலைத்தான் சாரும்

### நாடாளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மாயில் சாடுகின்றார்

"முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் பிளவுபட்டுள்ள இரு அணிகளும் என்ன விலை கொடுத்தேனும் ஒற்றுமைப்பட்டே ஆகவேண்டும். இப்பிரிவால் முஸ்லிம் சமுதாயம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, சமுதாயத்தின்மீது சவாரி செய்யாது, இரு அணிகளும் புதுச்சித்தாந்தங்களை, கோட்பாடுகளை, துவேசங்களைத் தூக்கி வீசிவிட்டு இந்த சமுதாயத்திற்காக ஒற்றுமைப்பட வேண்டும்" இவ்வாறு திகாமடுல்ல மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஐ.அனவர் இஸ்மாயில் தெரிவித்துள்ளார்.

பாலமுனை ஹில்ப் விளையாட்டுக் கழகம் நடத்திய கல்வி அபிவிருத்திக்கான உதவிவழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஹில்ப் விளையாட்டுக் கழகத் தலைவர் பீ.எம்.ஹுசையிர் தலைமையில் பாலமுனை மின் ஹாஜ் மகா வித்தியாலய மண்டபத்தில் வைபவம் நடைபெற்றது.

வைபவத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மாயில் தொடர்ந்து உரையாற்றுகையில்,

"இன்று முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைப் பிளவுபடுத்திய பழியும், பாவமும் பிரதமர் ரணில் விக்கிமசிங்கவையே சாருமென்பதில் சந்தேகமில்லை. அவரது நடவடிக்கைகளே இதற்குச் சான்றாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி எனும் வண்டியின் சாரதியாக ரணில் இருக்கும்வரை, அதில் நான் ஏறவும் மாட்டேன், முஸ்லிம் காங்கிரஸ் அவருக்கு ஆதரவளிக்கவும் கூடாதென மறைந்த தலைவர் ஏ.எச்.எம்.அஷரப் அழுத்திக் கூறியதனை மீறியதால் தான் இன்று சோதனையும் வேதனையும் கட்சிக்கும், மக்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸைப் பிரிக்கும் இரு அணியினரும் எமது பிரதேசத்திற்கு வருவதென்றால் ஒற்றுமையுடன் வரவேண்டும் என்ற அழுத்தத்தை மக்கள் கொடுக்க வேண்டும்.

தாய்லாந்துப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் த[illegible]த்தரப்பாகவே பங்குபற்றவேண்டும். தனி ஒருவர் பங்குபற்றுவதை ஏற்கமுடியாது"- என்று கூறினார்.

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்குச் சமஷ்டி வழங்கப்படும்போது, சமஷ்டிக்குள்ளான முஸ்லிம்களுக்கான பிராந்தியம் பற்றி அரசும் - விடுதலைப் புலிகளும் தாய்லாந்தில் நடைபெறும் பேச்சு வார்த்தைகளின்போது தெளிவான செயற்பாடுகள் பற்றிச் சொல்லவேண்டும்.

பிரதமரின் விளையாட்டு உச்சக்கட்டத்திற்குச் சென்று விட்டது. ரணில் நினைத்தால் முஸ்லிம்களுககுத தனியான பிரதிநிதித்துவம வழங்கலாம். ஆனால், புலிகளின் அனுமதியின்றி அவரால் பேசமுடியாதுள்ளது எனவும் இஸ்மாயில் தெரிவித்தார்.

# மீள்குடியமர்வுத் தடையைக் கண்டித்து யாழ். அரச செயலகத்தில் கறுப்புக்கொடி!

## தெல்லிப்பளை உண்ணாவிரதத்தில் பேச்சு

(நமது நிருபர்)

"நிரந்தர சமாதானம் ஏற்பட்டு தமிழ் ஆட்சி ஒன்று உருவாக்கப்பட்டாலும் தமிழருக்கென்று ஒரு பலமான இராணுவம் அல்லது படை இருக்கவேண்டும்"என நேற்று முன்தினம் தெல்லிப்பளைப் பிரதேச செயலகத்திற்கு முன்னால் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் உரையாற்றிய, நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் - "கடந்த வருடம் இலங்கையின் சுதந்திர தினத்தின்போது கடற்தொழில் சங்கங்களினால் யாழ்.அரச செயலகத்தில் கறுப்புக்கொடி ஏற்றப்பட்டதைப்போல், இவ் வருடமும் சுதந்திர தினத்தின்போது யாழ். அரச செயலகத்தில் மக்களின் மீள் குடியமர்விற்கு அனுமதிக்கக் கோரி கறுப்புக் கொடி ஏற்றப்படவுள்ளது. நாம் இவ்விடயம் தொடர்பாக நாடாளுமன்றத்திற்குள்ளேயும் வெளியேயும் பல போராட்டங்களை முன்னெடுக்க உள்ளோம்'' எனவும் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் உரையாற்றும்போது, மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக பல சட்ட திட்டங்களைத் தெரிவித்ததுடன், உலக நாடுகளில் நடைபெற்ற மக்களின் போராட்டங்களை எடுத்துக்காட்டி, அவற்றின் படி- பார்க்கும்போது யுத்தம் நடைபெறும் காலங்களில் கூட மக்களின் சொந்த இடங்களை இராணுவம் பயன்படுத்த முடியாது. இப்படி இருக்கையில் யுத்தம் நடைபெறாத இக்காலத்தில் மக்களின் வாழ்விடங்களில் இராணுவும் குடிகொண்டிருப்பதை எவராலும் நியாயப்படுத்த முடியாது எனத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உரையாற்றும போது, 'எமது விடுதலைப்போராட்டத்தின் - ஆயுதப்போரட்டத்தின் உச்சக்கட்டம் கட்டுநாயக்கத் தாக்குதல்தான். இத்தாக்குதலால் முழு உலகமுமே அதிர்ந்தது. இதன்போதுதான் தமிழரின் படைப் பலத்தை சர்வதேசம் அறிந்து கொண்டது. இவ்வாறு போராடியவர்கள் ஓய்ந்திருக்கையில், இராணுவம் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்க கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கின்றது. இது எமது மண், எங்களின் மூதாதையர் வாழ்ந்து எமக்கு விட்டுச்சென்ற எமது சொந்த மண். இதில் இராணுவம் குடியிருக்க முடியாது' எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் உரையாற்றினார். இவர் தனது உரையில், இப்படியான போராட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெறவேண்டும். இதற்கு நாம் ஆதரவு கொடுக்கத் தயாராக இருக்கின்றோம். இதன்போதுதான் மக்கள் படும் இன்னல்கள் வெளியுலகிற்குத் தெரிவதுடன், அரசாங்கமும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுமென்றார். (லி)

# யாழ்.குடாநாட்டு நிலைமைகளை மதிப்பிட சுவீடன் அதிகாரிகள்

(யாழ்ப்பாணம்)

சுவீடன் நாட்டின் சர்வதேச விஞ்ஞான செயற்திட்ட அதிகாரிகள் குழுவொன்று நாளை யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளது.

சுவீடனின் உப்சலா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இவ்வறிஞர் குழுவினர், சுவீடனின் சர்வதேச விஞ்ஞான செயற்திட்ட நடவடிகைகளுக்குப் பொறுப்பாக இருந்து செயற்பட்டு வருகின்றனர்.

மேற்படி செயற்திட்டத்தின் உதவிப்பணிப்பாளர் தலைமையில் வரவிருக்கும் இக்குழுவினர், குடாநாட்டில் தமது உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்திட்டங்களைப் பார்வையிடுவார்கள்.

அதேவேளை - சமாதானத்தின் பின்னரான யாழ்.குடாநாட்டு நிலைமைகளையும் அவர்கள் மதிப்பீடு செய்து அறிக்கை தயாரிப்பர். (க)

# சுகாதாரமற்ற உணவகங்கள் உடனடியாக சீலிட்டு மூடப்படும்

## சுகாதார வைத்திய அதிகாரி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில், குறிப்பாக மாநகரசபை எல்லைக்குட்பட்ட சில பகுதிகளில் ஆட்கொல்லி நோய்களான டெங்கு, கொலரா, நெருப்புக் காய்ச்சல் மற்றும் வைரஸ் காய்ச்சல் போன்ற நோய்கள்- உண்ணும் உணவு, பருகும் நீர் போன்றவற்றினால் பரவுவதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக உணவு தயாரிக்கும், விற்பனை செய்யும் நிலையங்களின் சுகாதார சீர்கேட்டினாலேயே மேற்படிநோய்கள் பரவிவரும் சாத்தியம் அதிகரித்துள்ளதாகத் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எம்.மரியதாஸன் அறிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் இயங்கும் உணவுற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களில் இனங்காணப்பட்ட சுகாதாரச் சீர்கேடுகளைக் களைய உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென எம்மால் பிரத்தியேகமாகக் கோரப்பட்ட போதிலும், நிறுவன உரிமையாளர்கள் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் அவற்றினைச் செய்யத் தவறியிருப்பதால், தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அந்நிலையங்களைச் சீலிட்டு மூட வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே- சகல உணவு உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்கள் அதியுச்ச சுகாதார நிலையைப் பேண வேண்டும். தவறின், அவற்றிற்கு எதிராக நடவடிக்கை மேற் கொள்ளுதல் தவிர்க்க முடியாததாகும்.

நோய்த்தடுப்பு நடவடிக்கையின் முதற்கட்டமாக- உணவகங்கள், தேனீர்க்கடைகள் போன்றவை தகுதி வாய்ந்த குழுவினரின் திடீர் பரிசோதனைக்குட்படுத்தப்பட இருப்பதாக அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாமனிதர் குமார் பொன்னம்பலம் தமிழினத்தின் தன்மானச் சின்னம்!

ஈழத் தமிழர்களின் இனவிடுதலைப் போராட்ட வரலாற்றில் மறக்க முடியாத ஓர் அத்தியாயம் 2000 ஆம் ஆண்டு ஜனவரி 5ஆம் திகதி கொழும்பில் நடந்த, எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத குமார் பொன்னம்பலம் அவர்களின் படுகொலையாகும்.

தனக்கென வாழாது தமிழினத்துக்காகவே வாழ்ந்த, வாழ நினைத்த குமார் அவர்கள் சிங்கள அரச காடையர்களால் படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் 3 ஆண்டுகளாகின்றது.

மரணம் கோழைக்கு ஒவ்வொரு கணமும் வருகின்றது. ஆனால், வீரனுக்கு அது ஒருமுறைதான் வரும். அந்த மரணத்தையும் அந்த வீரன் ஒரு இலட்சியத்திற்காக கொடுத்து விடுவானானால் அவன் மரணத்தையும் வென்ற மகாத்மாவாகி விடுகின்றான். அந்த வகையிலேயே அண்ணன் குமார் அவர்களும் மரணத்தை வென்ற மாமனிதர்.

ஈழத்தமிழினத்தின் சுதந்திரத் தமிழீழம் என்ற புனித இலட்சியத்திற்காக எதிரியின் வாசலில் நின்று உறுமி தன் இன்னுயிரை அர்ப்பணித்த மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களுக்கு, ஈழத் தமிழினம் செய்யவேண்டிய கைமாறு அவர் காணத்துடித்த தமிழினம் தலைநிமிர்ந்து வாழவேண்டும் - மற்றைய இனம் அனுபவிக்கின்ற உரிமைகளைத் தமிழினமும் அனுபவிக்க வேண்டும் - தமிழீழ மண்ணில் தமிழனைத் தமிழனே ஆளவேண்டும் என்ற நிலையை உருவாக்குவதற்காகப் போராடுவதேயாகும் - அத்தகைய இலட்சியத்தை அடைவதற்காகப் போராடுகின்ற விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு, எமது பங்களிப்பினை வழங்குவதே குமாருக்கு நாம் செய்கின்ற உண்மையான கடமையாகும்.

அமரர் குமார் அவர்கள், ஈழத் தமிழர்கள் நடத்துகின்ற உரிமைப் போராட்டத்தின் உண்மை நிலையை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வெளிச்சம் போட்டுக்காட்ட தமது மேலான சட்ட அறிவையும், வாதாடும் ஆற்றலையும் வாரிவழங்கியவர். அவருடைய ஆணித்தரமான கருத்துக்களையும், வெளிப்படுத்தல்களையும், அதற்குரிய கருத்துக்களின் மட்டத்தில் நேரடியாகச் சந்தித்து எதிர்கொள்ள முடியாத கூட்டத்தினரால் அவர் மிகுந்த கோழைத்தனமான முறையில் கொலை செய்யப்பட்டார். கொழும்பில் வாழும் தமிழர்கள், சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு அஞ்சி அதன் அடிவருடிகளாகினார்கள். அல்லது பேச்சின்றி மௌனம் காப்பவர்களாக மாறினார்கள். அத்தகைய சந்தர்ப்பவாத சமரசம் எதனையும் செய்ய மறுத்து நின்றமையால் சிங்கள பௌத்த பேரினவாதிகளின் கூலிப்படையினரால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.



குமார் பொன்னம்பலம் அவர்கள் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியை வழிநடத்தி, அதன் தலைவராகவும் புகழ்பெற்ற வழக்கறிஞராகவும், இலங்கையின் சிரேஷ்ட வழக்கறிஞர்களில் ஒருவராகவும் விளங்கியவர். தமிழ் மக்களின் துயர்துடைப்பதற்காகப் பல வழக்குகளில் வாதாடி வெற்றி பெற்றவர். செம்மணிப்புதைகுழி பற்றிய செய்திகள் வெளிவருவதற்குக் காரணமாக இருந்த கிருஷாந்தி பாலியல் வல்லுறவுக் கொலை வழக்கிலும்- அதற்கு முன்பாக மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள் சம்பந்தமான விசாரணைகளின்போதும் கொடுமை புரிந்த இலங்கை இராணுவ வெறியர்களுக்கு எதிராக வாதிட்டமை குறிப்பிடத்தக்கது. இவர் திறமை மிகுந்த சட்டத்தரணியாக இருந்த போதும் பேரினவாதத்திற்கு எதிராக தொடர்ச்சியாகக் குரலெழுப்பியவர் என்ற காரணத்தினால் ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டார்.

இவர் தனது அரசியல் வரலாற்றின் பிற்பட்ட காலப்பகுதியில்- ஈழத் தமிழர்களின் போராட்ட உச்சக்கட்டத்தை அடைந்த காலப் பகுதியில் இவரது பணி போற்றத் தக்கதாகவே அமைந்தது. ஏனைய தமிழ் அரசியல்வாதிகள் தடம் புரண்டு தவறான பாதையில் சென்ற போதும், காலத்தின் அவசியத்தை உணர்ந்து கடமையை உணர்ந்து தளம்பாது தனித்து நின்று துணிச்சலுடன் செயற்பட்டது இவரின் சேவையின் சிகரமாகும்.

அண்ணன் குமார் பொன்னம்பலம் அவர்களுடைய அரசியல் வாழ்க்கை, தமிழ் மக்களுடைய அரசியல் வாழ்க்கையோடு - தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசையோடு - பின்னிப்பிணைந்ததாக அமைந்துவிட்டது.

அன்று, ஒரு குமார் பொன்னம்பலம் மட்டும்தான் தன்னுடைய கருத்துக்களைப் பகிரங்கமாகச் சொன்னார்; ஒரு குமார் பொன்னம்பலம்தான் எதிர்ப்புக்களை நேரடியாகச் சந்திக்கத் திராணி உள்ளவராக இருந்தார்; ஏனைய தமிழ் தலைவர்களால்; குமார் பொன்னம்பலத்தின் இலட்சியத்தில் பயணிப்போம் என்று கூறிக் கொள்பவர்களால் இது முடியவில்லையா? என்ற கேள்வி பலராலும் எழுப்பப்பட்டுக் கொண்டே இருக்கிறது. குமார் விட்டுச்சென்ற இடைவெளி எப்போது நிரப்பப்படும் என்ற கேள்வி எழுப்பப் படத்தான் செய்கிறது.

குமார், தமிழினத்தின் உரிமைக் குரலாக விளங்கியதால்தான்- ஒரு மாமனிதராக எம்மினத்தின் நெஞ்சங்களில் பதிந்தார்.

**- சி.இளங்கோ**
**பிரசாரச் செயலாளர்**
**அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்**

# உன்னத இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு அழிக்காது!



தாயக தேசத்தின் விடுதலையைத் தணியாத இலட்சியமாக வரித்து, அந்த உன்னதமான இலட்சியத்திற்காக அரும்பணி ஆற்றி வந்த ஒரு அபூர்வமான மனிதரை நாம் இழந்து விட்டோம். விடுதலைக்காக எரிந்து வந்த ஒரு இலட்சியச் சுடர் அணைந்து விட்டது. பகைவனின் கோழைத்தனத்திற்குத் தமிழினப்பற்றாளர் ஒருவர் பலியாகி விட்டார்.

அமரர் குமார் பொன்னம்பலம் அவர்கள் அரசியல் சுயநலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு தனித்துவமான மனிதர். ஒரு புரட்சிகரமான அரசியல்வாதி. நேர்மையுடன், நெஞ்சுறுதியுடன் மனித நீதிக்காக குரலெழுப்பி வந்தார். சிங்களத்தின் தலைநகரில் தனித்து நின்று சிங்களபேரினவாதத்திற்குச் சவால் விடுத்து வந்தார். ஆபத்துக்கள் சூழ்ந்திருந்தபோதும் அஞ்சா நெஞ்சத்துடன் அநீதியை எதிர்த்துப் போராடியவர்.

அமரர் பொன்னம்பலம் அவர்கள் ஒரு உயரிய தேசப்பற்றாளர். தமிழீழ தாயகத்தில் ஆழமான பாசம் கொண்டவர். தமிழர் தேசம் தன்னாட்சி உரிமைபெற்று சுதந்திர நாடாக உருவாக வேண்டுமென ஆவல் கொண்டவர். ஆயுதப் போராட்டம் வாயிலாகவே தமிழரின் விடுதலை சாத்தியமாகும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர். ஆதலால் பகிரங்கமாகவே எமது விடுதலை இயக்கத்தையும், எமது இயக்கத்தின் கொள்கையையும் ஆதரித்தார். எமது விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தி உலக அரங்கில் குரல் கொடுத்து வந்தார். நேர்மைத் திறமையுடன், அற்புதமான துணிச்சலுடன் அன்னார் ஆற்றிய அரும்பணி மிகவும் பாராட்டத்தக்கது.

அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களின் இனப்பற்றிற்கும், விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து, அவரது நற்பணியை கௌரவிக்கும் முகமாக 'மாமனிதர்' என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். உன்னத இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களைச் சாவு அழித்துவிடுவதில்லை. எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்களுக்கு என்றும் அழியாத இடமுண்டு.

**தமிழீழ தேசியத் தலைவர்**
**வே. பிரபாகரன்**

# பாடங்கள் பாய்ச்சலுக்காகட்டும்




இலங்கை கிரிக்கெட் அணியின் தற்போதைய இறங்குமுகநிலை பல்வேறு தரப்பிலும் பலவிதமான உணர்வலைகளை எழுப்பியுள்ளது. கிரிக்கெட் ஆர்வலர்கள், விமர்சகர்கள், அனுபவமிக்க விளையாட்டு வீரர்கள் என்று இன்னோரன்ன புகுதியினரும் பல்வேறு கருத்துக்களை முன்வைக்கிறார்கள். தோல்விகளுக்குச் சமாதானம் கூறும் சில கருத்துக்கள் கூறப்பட்டாலும், பெரும்பான்மையாக இலங்கை அணி பற்றிய கண்டனக்குரல்களே ஓங்கி ஒலிக்கின்றன.

1996 இல் லாகூரில் இலங்கை -அவுஸ்திரேலிய அணியைத் தோற்கடித்து உலகக் கிண்ணக் கிரிக்கெட் சாம்பியன் பட்டத்தைச் சூடிக்கொண்டபோது, இலங்கை அணியின் பொற்காலமாக அது கருதப்பட்டது. ஆனால், அதன்பின் குறிப்பிட்டகாலம் வரை அந்த உயர்தகைமையைத் தக்க வைத்துக் கொண்டாலும், நீண்டகாலப் போக்கில் படிப்படியாக வீழ்ச்சிப்பாதையை நோக்கிச்சென்று இன்று உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு ஒருமாதமே இருக்கும் நிலையில், தென்னாபிரிக்காவில் நடைபெறவிருக்கும் உலகக்கிண்ணப் போட்டிகளில் இலங்கை அணி என்ன செய்யப்போகிறது என்பது புதிராகவே இருக்கின்றது.

கடந்த மாதம் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற ஐந்து ஒருநாள் போட்டிகளில் நான்கில் தோல்வியைத் தொடர்ந்து, அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு நாள் போட்டிகளில் மூன்றிலும் தோல்வி என்ற நிலை.

1996 இல் உலகக்கிண்ணத்தை வென்றதும், விளையாட்டென்றால் கிரிக்கெட் தான் என்று எல்லோரும் தலையில் தூக்கி வைத்து கொண்டாடியமையும், ஏனைய பல விளையாட்டுக்களை மாற்றான்தாய் மனப்பான்மையுடன் நடாத்தியதையும் இப்போது கோபத்தோடு சுட்டிக்காட்டுகிறார்கள் இன்னொரு சாரார், இவர்களின் திறமை உபகண்டத்துக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதா அதற்கப்பால் வெறும் சாதாரணங்கள்தானா என்றும் கேட்கிறார்கள். பயிற்றுநர் வட்மோர் இருந்தும்கூட இந்நிலையென்றால், வட்மோர் என்னதான் செய்கிறார் என்ற வினா ஒருபுறம் எழும்புகின்றது. ஏனெனில், 1999 இல் இங்கிலாந்தில் படுதோல்விகளைச் சந்தித்தபின் வட்மோர் மீண்டும் கொண்டுவரப்பட்டார். ஆனால், சிறிது காலம் தவிர, குறிப்பாகச் சொல்லும்படி ஒன்றுமே இல்லையே என்று சுட்டிக்காட்டுகிறார்கள். சனத், சமிந்த வாஸ், முரளி, அத்தபத்து இவர்கள் தவிர ஒப்பீட்டளவில் ஏனைய வீரர்கள் வருவதும் போவதுமாக இருக்கிறார்களே ஒழிய, சொல்லிக்கொள்ளும்படியாக எதுவும் காணப்படவில்லையென்றும் சுட்டிக்காட்டுகிறார்கள்.

கிரிக்கெட்டுக்காக ஒதுக்கப்படும் நிதி எந்தவகையில் செலவழிக்கப்படுகின்றது என்று உதாரணம்காட்டி, இது தேவையா என்று கண்டனம் எழுப்புகிறார்கள். வெளிநாட்டுக்கு அணி சுற்றுப்பயணம் செய்யும்போது உத்தியோகத்தர்கள் என்ற பெயரில் அநாவசியமாக சிலர் சேர்க்கப்படுவதை விடுத்து ஒரு வீரரைச் சேர்த்தால் அது பிரயோசனமாக இருக்கும் என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. மேலும்





தென்னாபிரிக்காவுக்கு, போட்டி நடுவே இடையில் தெரிவாளர் சென்றது மிகக்கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கின்றது. இவரது ஒருநாள் செலவு முப்பதாயிரம் ரூபா. எனவே, கிரிக்கெட்டின் பெயரில் தனிநபர்களின் ஆடம்பரச் சுற்றுப்பயணங்களா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது.

இன்னொரு வகையில் அணியில் உள்ள ஒரு சிலர் அல்லது தெரிவாளரின் விருப்பு வெறுப்பு அல்லது பயிற்றுநரின் விருப்பம் என்பன அணித்தெரிவில் பங்கு செலுத்துவதாகக் குற்றஞ்சாட்டும்வேளை, தேசிய அணியைக் கட்டியெழுப்புவதில் பெரிதும் அக்கறை இல்லையென்பது நன்கு நிரூபணமாகிறது என்கிறார்கள்.

அவதானித்துப் பார்த்தால் - அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மார்க் வோ, ஸ்ரீவ் வோ போன்றவர்களையே உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு உள்வாங்காத நிலையில், இலங்கை அணி முப்பந்தைந்து வயது கடந்து செல்லும் ஹசான் திலகரட்ண, அரவிந்த ஆகியோரைத் தஞ்சமடைந்து இருப்பது ஒரு வேடிக்கை அல்லவா? பல வருடங்களாக சம்பந்தப்பட்டவர்கள்- ஏன் ஒரு இளந்தலைமுறையை வளர்க்க இயலவில்லையா? அல்லது பல்வேறு காரணிகள் ஒன்று சேர்ந்து வளர்ச்சிச் சங்கிலியில் முறிவுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறதா?. சரியானதொரு தலைமுறை வளர்க்கப்பட்டிருந்தால், சொந்தக்காரணங்களுக்காக முதற் கட்டத்தில் விளையாட முடியாதென்பதை ஏற்று, அடுத்த கட்டத்துக்கு கம்பளம் விரிக்கப்பட்டிருக்க முடியாது. அவிஸ்க போன்றவர்கள் அணியில் இருந்துகொண்டும் வெறும் பார்வையாளர்களாக மனம் வெதும்பியிருக்க முடியாது.

மேலும் தென்னாபிரிக்க, அவுஸ்திரேலிய கிரிக்கெட் ஆடுகளங்கள் மிகவேகமானவை என்று தெரிந்து கொண்டும், இலங்கையிலிருந்து புறப்படமுன் கெத்தாராம போன்ற வேகமான ஆடுகளங்களில் பயிற்சிபெறப் பிரபல வீரர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளார்கள். காயப்பட்டால் அணியில் இடம்கிடைக்காது. இடம் கிடைக்காவிட்டால் பணம் கிடையாது. சுற்றுலாச் சந்தர்ப்பம் இழக்கப்படும் என்ற குறுகிய நோக்கிலேயே இவர்கள் செயற்பட்டிருக்கிறார்களே ஒழிய, தேசிய நலன் இவர்களால் சிந்திக்கப்படவில்லை என்று ஒரு வாட்டு வாட்டுகிறார்கள்.

இதே விடயத்துடன் தொடர்பாக விமர்சகர் ஒரு வினாவை எழுப்புகிறார். அதாவது, இப்படியாக பயிற்சி நெறிமுறைகளை மீறுவதற்கு ஜோன் புக்கானன் அல்லது டங்கன் பிளெச்சர் (அவுஸ்திரேலியா - இங்கிலாந்து பயிற்றுநர்கள்) அனுமதித்திருப்பார்களா? என்கிறார் அவர். இதிலுள்ள உண்மையை ஜீரணிக்க முடியவில்லை என்பதே உண்மை. எனவே, இலங்கைக் கிரிக்கெட்டின் முடிவின், ஆரம்பமாக இந்தக்காலகட்டம் இருந்துவிடக்கூடாதென்று எல்லோரும் கருதுகின்றார்கள். ஏனெனில் எதிர்வரும் உலகக் கிண்ணம் இலங்கைக்கு அல்ல என்ற துன்பமான உணர்வை அநேக விமர்சகர்கள் துக்கத்துடன் வெளிப்படுத்துகிறார்கள். ஆகவே, கிரிக்கெட் அபிமானிகள் எல்லோரும், அரசு, பத்திரிகைகள், பொதுமக்கள், வீரர்கள் விரைவாகச் செயற்பட வேண்டியது அவசியமாகிறது. களைகள் அகற்றப்படவேண்டும் . நல்ல நாற்றுக்கள் புறந்தள்ளப்படக் கூடாது. கிரிக்கெட் உலகததைச் சார்ந்த பெருந்தலைகள், மேலும் பெருமை பெற்றுவிட்ட வீரர்கள், அபிவிருத்தியடைந்துவரும் இலங்கைத்தீவுக்குள் தம்மை மட்டும் எல்லா வகையிலும் அபிவிருத்தியடைந்த குழாமாக வெளிக்காட்டிக் கொள்ள முயலக்கூடாது. அப்படி முயல்பவர்கள் தூக்கி எறியப்படவேண்டும் என்றே விமர்சகர்கள் கருதுகிறார்கள்.



- பயிற்றுநர் வட்மோர்.

**- நிர்மலன்.**

மொத்தத்தில் எல்லாத் திசைகளிலிருந்தும் இலங்கையின் கிரிக்கெட் அணி கண்டனங்களை எதிர்கொள்கின்றது. அணிகளில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவது இயல்பானதே. எண்பதுகளின் மேற்கிந்திய அணி கொண்டிருந்த வீச்சு இன்றும் ஆச்சரியத்துடன் நோக்கப்படுகின்றது. இம்ரான்கானின் காலத்தில் பாகிஸ்தான் அணி எத்தகையது என்பதைச் சொல்லித்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில்லை. ஆனால், இவர்களின் கிரிக்கெட் அன்றுபோல் இன்று இல்லை என்பது உண்மை. இதேபோலத்தான் இலங்கை அணியிலும் ஏற்றத்தாழ்வுகள் எற்படலாம். இது விளையாட்டுத்துறை வரலாற்றில் சகஜமானதுதான். இங்கு என்ன குறிப்பிடப்பட வேண்டுமெனில், பல்வேறு கருத்துப் பரிமாறல்கள் விமர்சனங்களின் ஊடே CRICKET SYSTEM என்ற அடிப்படையில் தொய்வுநிலை ஏற்பட்டுவிட்டதென்ற உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதாகும். இதுவே துன்பமானதாகும். இதனின்றும் திட்டமிட்ட முறையிலேயே விடுபட வேண்டும். அப்படி விடுபடுவது என்பது அவ்வளவு கடினமானதாகவும் இருக்கப்போவதில்லை. ஏனெனில், இலங்கைத் தீவில் கிரிக்கெட் மீது காட்டப்படும் ஆர்வமும், அவதானமும் வேறெந்தத்துறையைக் காட்டிலும் மேலானதாகும். ★

---

# இந்த வயதில்


## இப்படியா

உலக டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் மிகச் சிறிய வயதில் கிரிக்கெட் காப்பாளர் பணியைச் செய்வதற்கு அழைக்கப்பட்டவர் என்ற சாதனை, தற்போது எல்லோரையும் புருவத்தை ஆச்சரியத்தால் உயர்த்த வைத்துள்ளது. இது ஒரு குஜராத் மாநில இந்தியச் சிறுவனைச் சாரும். அவரது பெயர் சொல்லித்தான் அறியப்படவேண்டியது அல்ல. 2002 இல் இந்திய - இங்கிலாந்து இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதன்முதலாகக் களமிறங்கியபோது பார்த்திவ் அஜே பட்டேலுக்கு வயது 17 வருடம் 152 நாட்கள்.



பார்த்திவ் பிறப்பிலேயே ஆசீர்வதிக்கப்பட்டவர் என்கிறார்கள் எல்லோருமே. இவர் விக்கெட்டுக்களின் பின்னால் செயற்படும் வேகம், இடது வலது பக்கங்களின் பாய்ச்சல் வேகம், பந்து துடுப்பில் பட்டு திசை மாறும் கோணத்தைக் கணக்கிடும் சமார்த்தியம் (செக்கன்களின் பிரிவில்) விக்கெட்டுக்களை Stump செய்யும் அதீத வேகம் எல்லாம் பிரமிக்க வைக்கின்றன. 2002 இல் டாக்காவில் நடைபெற்ற 17 வயதிற்குட்பட்டோருக்கான உலக கனிஷ்ட ஆசியக் கிண்ணப் போட்டிகளில் சாம்பியன் பட்டம் வென்ற இந்திய அணியின் தலைவர் பார்த்திவ். 15, 17, 19 வயதுப் பிரிவுகளில் விளையாடியவர் இவர். ஆனால், இந்தியாவின் முதற்தர கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் (ரஞ்சி, துலிப் கிண்ணங்கள்) விளையாடிய அனுபவம் இல்லை. இதற்குமாறாக இந்தியத் தேசிய அணியின் அங்கத்தவரான இந்தத் திடீர்த் தெரிவு எல்லா மட்டங்களிலும் அங்கீகாரம் கலந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. இந்தியாவின் புகழ்பெற்ற விக்கெட் காப்பாளர் சையத் கிர்மானி பார்த்தீவை அங்கீகரிக்கிறார். அதேவேளை, "இவனை ஆழ்கடலில் தூக்கிப் போட்டிருக்கிறார்கள். பார்த்தீவ் அதில் நீந்த முனைகிறான். அதற்குச் சிறிது காலஅவகாசமும் தேவைப்படும். அவன் வெற்றிகரமாக சாதிக்கக்கூடிய உளப்பாங்கும், திறமையும் கொண்டவனாகவே இருக்கிறான்" என்கிறார்.

இந்தச் சிறு பையன் இன்னும் மெருகேற்றப்பட வேண்டியவன். இன்னும் சில சில உபதுறைகளில் நிரம்பப் பயிற்சி பெறவேண்டும். மேலும் துடுப்பாட்டத்திலும் மிளிரக் கூடியனவாக இருக்கின்றான் என்று, கிர்மானி அவனைப் பற்றிய அவதானத்தைத் தெரிவிக்கிறார். பார்த்திவ் - அவுஸ்ரேலியாவில் முன்னால் புகழ்பெற்ற விக்கெட் காப்பாளர் றொட்ணி மார்ஷிடம் பயின்றவன். 2001 இல் இந்தியா A அணியுடன் தென்னாபிரிக்கா சென்றவன். மற்றும் நியூசிலாந்து, இலங்கை, இங்கிலாந்து முதலிய நாடுகளிலும் கால்பதித்து வந்தவன். 16 வயதுக்குட்பட்ட பிரிவில் ஒரு சதம், இன்னொரு இரட்டைச் சதம் தன் கணக்கில் சேர்த்து வைத்திருப்பவன். மேலும் இந்தச் சிறுவயதிலேயே உலகப் புகழ்பெற்ற வீரர்களுடன் இணைந்தும் எதிர்த்தும் விளையாடும் வாய்ப்புப் பெற்றவன். இந்திய அணியைப் பொறுத்தவரை கிரன் மோரே, நயான் மொங்கியா ஆகியோருக்குப்பின் பலர் விக்கெட் காப்பாளர்களாக வருவதும் போவதுமாக இருந்திருக்கிறார்கள். இப்பொழுதும்கூட ஒருநாள் ஆட்டத்திற்கு விக்கெட் காப்பாளர் ராகுல் டிராவிட். இந்நிலையில் அடுத்த மாதம் தொடங்கவிருக்கும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட இந்திய அணியின் பதினைந்து பேரில் பார்த்தீவும் ஒருவன். அங்கு நடைபெறப்போகும் போட்டிகளில் ஏதோ ஒருவகையில் பார்த்தீவும் இணைந்து கொள்ளப்படத்தக்க சாத்தியங்கள் மிகவும் அதிகம். சில வேளைகளில் டிராவிட்டிற்கு ஓய்வு கொடுத்து விட்டு, பார்த்தீவே விக்கெட் காப்பாளராக இருக்கவும் கூடும். எது எவ்வாறாயினும், சர்வதேச கிரிக்கெட் உலகம் இந்தச் சிறுவனை வியப்புடன் உன்னிப்பாகக் கவனிக்கத்தான் போகிறது. "பார்த்தீவ்!, உனது பாதை நீண்டது. கடினமானது. ஆனால்-எங்கள் பார்வையில், உன் முகத்தில் மழலைதான் கூடுதலாகத் தெரிகிறதென்றால், நீயோ பெரிய அனுபவஸ்தன் போல உன் கடமையைச் செய்கிறாய். உனக்கு கிரிக்கெட் உலகின் வாழ்த்துக்கள்" என்று மனமார வாழ்த்தும் எண்ணம் சுரக்கிறதல்லவா?



**~ நிமலா.**

# பேசப்படுவதற்கே பிறந்தவர்

அவுஸ்திரேலிய டெஸ்ட் அணித் தலைவர் ஸ்ரீவ் வோ, உலகக் கிண்ணக் கிரிக்கெட் அணியில் இடம்பெறமாட்டார் என்ற செய்தி ஒருபுறம் இருக்க இங்கிலாந்து - அவுஸ்திரேலியா ஆஷஸ் தொடரின் இறுதி டெஸ்ட், போட்டியான ஐந்தாவது டெஸ்ட் போட்டியின் பின் ஸ்ரீவ் வோ அவுஸ்திரேலிய டெஸ்ட் அணிக்குத் தலைமை வகிப்பாரா? அல்லது அவரது டெஸ்ட் வாழ்க்கை முடிவடைகிறதா? என்ற வினா ஒன்று எழும்பியது. இப்போது அதற்கு விடை தந்திருக்கிறார்கள் அவுஸ்திரேலிய அணித் தெரிவாளர்கள். தெரிவாளர்களின் தலைவர் டிரெவர் ஹோன்ஸ், ஸ்ரீவ் வோவை நீக்கும் எண்ணம் ஏதும் தமது குழுவினருக்கு இல்லை என்று கூறியிருக்கிறார். அணியில் தொடர்வதா? இல்லையா? என்பதை அவர்தான் தீர்மானிக்க வேண்டும். ஸிட்னி டெஸ்ட் முடிந்த பின்னரும் எமது ஆதரவு அவருக்குத் தொடரும் என்கிறார். ஆனால் - தொடர்ந்து, ஸ்ரீவ் வோ ஏற்கனவே தனது ஆசையைப் பல சந்தர்ப்பங்களில் வெளியிட்டுள்ளார். அதாவது, 2004 வரைதான் டெஸ்ட் விளையாட வேண்டும். அதுவும் இந்திய மண்ணில் இந்தியாவை மண் கவ்வச் செய்ய வேண்டும் என்பது அவரின் தணியாத ஆசை.



என்றும் பிரகாசிக்கும் ஸ்ரீவ் வோ.

இப்பொழுது இந்திய அணி, நியூசிலாந்தில் ஐஸ் கவ்வுவது ஸ்ரீவ் வோவுக்கு இன்னம் துணிச்சலைக் கொடுக்கும். ஆஷஸ் தொடரின் ஐந்தாவது ஆட்டத்தில் விளையாடும் வோ, முன்னாள் தலைவரும் அணிவீரருமான அலன் போடரின் உலக சாதனையான 156 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியமை என்கிற சாதனையைச் சமன் செய்கின்றார். அதோடு, ஆஷஸ் ஐந்தாவது டெஸ்டில் சதம் அடித்ததுடன், டெஸ்ட் வரலாற்றில் அலன் போடர், கவாஸ்கருக்கு அடுத்து 10,000 ரன்களுக்கு மேல் குவித்த மூன்றாவது சாதனையாளராகிறார்.


தொடர்ந்து உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு பின்னரும், மேற்கிந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடர் (2003), இந்தியாவிற்கு எதிரான டெஸ்ட் தொடர் (2004) ஆகியவற்றிலும் விளையாடும் ஒரு சந்தர்ப்பம் தற்போது ஸ்ரீவ் வோவிற்குக் கிடைத்திருக்கிறது போலத் தெரிகின்றது. இதனை அவர் கைநழுவ விடமாட்டார் என்பது கிரிக்கட் ரசிகர்களின் எண்ணம்.

இது ஒருபுறம் இருக்க-அவுஸ்திரேலிய உலகக் கிண்ண அணித் தெரிவில் சிலர் சேர்க்கப்பட்டிருப்பதை ஆச்சரியத்துடன் பார்க்கிறார்கள் விமர்சகர்கள். ஆனால், அதனைக் கண்டிக்கவில்லை. ஏனெனில் தற்போதைய உயர்தகைமையின் அடிப்படையிலேயே அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். ஒருவர் அவுஸ்திரேலிய A அணியின் தலைவர் ஜிம்மி மஹேர். இவர் தனது ஒருநாள் துடுப்பாட்டச் சிறப்பின் மூலம் அணியில் இடம் பிடித்துள்ளார். இன்னொருவர் பிரட்ஹொக். இவர் ஒரு சுழற்பந்து வீச்சாளர். ஷேன்வோனுக்கு இணைந்து செல்லத்தக்கவர் என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இன்னொருவர், அன்ட்ரு சிமன்ஸ். மிகச் சிறந்த களத்துடுப்பாளர். சந்தர்ப்பத்திற்கேற்ப மிக வேகப்பந்து வீச்சாளராகச் செயற்படத்தக்கவர். அதேவேளை, ரண்கள் குவிப்பதிலும் சளைத்தவர் அல்ல. அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியாகட்டும், ஒருநாள் அணியாகட்டும் அவர்களது பலம் சிறிதும் குறையாதவகையில் அணித்தெரிவைச் செய்யக்கூடியதாக உள்ளது. உங்கள் அழகின் ரகசியம் என்ன என்று விளம்பரங்களில் கேட்பது போல, அவுஸ்திரேலியாவை நோக்கியும் அந்த வெற்றி ரகசியம் என்ன என்று கேட்க வேண்டும்போல இருக்கிறதல்லவா.

- செ.ஆர்த்திகன்.

# இலங்கை அணி எங்கே போகிறது!

வருகின்ற பெப்ரவரி மாதம் தென்னாபிரிக்காவில் நடைபெறவிருக்கும் உலகக் கிண்ணச் சுற்றுப்போட்டியில், எந்த அணி கிண்ணத்தைக் கைப்பற்றப் போகின்றது? என்ற எதிர்பார்ப்புடன் அனைவரும் இருக்க, அதே நாட்டில்-அண்மைக்காலத்தில் இலங்கை அணி செய்த கிரிக்கெட் சுற்றுலா பல எதிர்பார்ப்புக்களையும் மீறி வெறும் புஸ்வாணம் போலாகியது ஏன்...? 1996 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்ட இலங்கையணி, அன்றிலிருந்து கணிசமான வெற்றிகளைக்



குவித்துக் கொண்டு உலகத்தின் கவனத்தை ஈர்த்துக் கொண்டது.

ஆனால், ஏன் இப்பொழுது தடுமாகிறது..? கடந்த யூலை மாதம் இங்கிலாந்தில் நடைபெற்ற இந்தியா, இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான முக்கோண ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடர்களில் ஆறு போட்டிகளுள் ஐந்து போட்டிகளில் தோல்விகளைச் சந்தித்தமை, அதன்பின் கடந்த மாதம் இலங்கையில் நடைபெற்ற ஐ.சி.சி. சம்பியன் போட்டிகளில் இந்தியாவுடனான இறுதிப் போட்டிகளில் பெரிதாக சாதிக்க முடியாமற்போய் தோல்வியைச் சந்திக்கும் தறுவாயில் நின்றமை, இவற்றோடு கடந்த வாரங்களில் தென்னாபிரிக்கச் சுற்றுலாவில் டெஸ்ட் போட்டிகளில் இரட்டை இன்னிங்ஸ் முறையில் தோல்வி கொண்டது, ஒருநாள் போட்டிகளில் 5:1 என்ற முறையில் படுதோல்விகளைச் சந்தித்தமை, இன்னும் இம்மாதம் 17 ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் நிறைவுறவுள்ள முக்கோணப் போட்டித் தொடரில் இங்கிலாந்துக்கெதிரான போட்டியில் தோல்வியைச் சந்தித்தமை - இவை எல்லாவற்றையும் நோக்கும்போது இலங்கை அணியின் விளையாட்டு என்பது வெறும் கேள்விக்குறியாகவே அமைகின்றது.

அத்துடன், அண்மைக்காலப் விளையாட்டுக்களை எடுத்துநோக்கும்போது அணித்தலைவர் சனத் ஜெயசூரியா, மஹேல ஜெயவர்த்தன, ரசல் ஆர்னல்ட் ஆகியோர் எதிர்பார்த்தளவு விளையாடவில்லை. இதுவும் அணியின் தோல்விக்கு முக்கிய காரணமாகும். இதில் குறிப்பாக, அணித்தலைவர் சனத் ஜெயசூரியா அண்மைக்காலமாக டெஸ்ட் போட்டிகள் என்றாலும் சரி, ஒருநாள் போட்டிகள் என்றாலும் சரி மிகக் குறைந்த ஒட்டங்களை எடுத்து



ஆட்டமிழந்து வருகிறார் என்பது வேடிக்கை.

இருந்தும்கூட மூத்த ஆட்டக்காரர்களான அரவிந்த டி சில்வா, மாவன் அத்துப்பத்து போன்றோர் தொடர்ந்தும் தங்கள் திறமையை அவ்வப்போது காட்டியபடியேதான் உள்ளார்கள். இவர்கள் ஒரு சில நேரங்களில் அணியின் வெற்றிக்கு உரமாக நிற்கிறார்கள் என்பது உண்மை.

அத்துடன் பந்து வீச்சாளர்களான சமிந்த வாஸ், டில்கார பெர்ணான்டோ, முத்தையா முரளிதரன் போன்றோர் தொடர்ந்தும் தங்கள் திறமையைத் தக்க வைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இன்னும் களத்தடுப்பு என்பது ஒருபோதும் குறைந்துவிடவே இல்லை. இப்படி இருக்கையில், அண்மைக்காலமாக இலங்கை அணியின் தோல்விகளுக்குத் காரணந்தான் என்ன...?

எதிரணி முதலில் துடுப்பெடுத்தாடும்போது மிக அதிகமான ஒட்டங்களைக் குவித்தால், பதிலுக்குத் துடுப்பாடும் இலங்கையணி மிகக் குறுகிய ஓவர்களில் வெற்றி இலக்கையடைந்து சாதிப்பது அந்தக்காலம். ஆனால், இன்றோ நிலை தடுமாறுகிறது. இலங்கையணியின் அதிரடி ஆட்டங்கள் மங்கிப்போய் இடைத்தர நிலையில் நின்று ஆடி, இறுதியில் வெற்றி இலக்கை அடைய முடியாமல் திணறுகிறது. இலங்கையணியில் சிக்சர்களோ, பவுண்டரிகளோ இப்போது மிகக் குறைவாகத்தான் காணப்படுகிறது. ஓங்கி அடிப்பதா? அல்லது விக்கெட்டுகளைத் தக்க வைத்துக் கொள்வதா? என்று குழம்பிப்போய் உள்ளது இலங்கையணி.

அத்துடன், முதலில் துடுப்பெடுத்தாடும்போது முதல் 15 ஓவர்கள் ரன்களை விரைவாகக் குவிப்பதற்கே பொருந்தும். இந்தநிலைக்கு இப்போது இலங்கையணி எங்கே போனது?

கிரிக்கெட் உலகம் மாறிவருகிறது. விளாசல் வீரர்களையே உள்வாங்கிக் கொண்டிருக்கின்றன உலக அணிகள், வீரேந்தர் ஷேவாக், செளரவ் கங்குலி, கில் கிறிஸ்ட், கைடன் ரிரெஸ்கோதிக், சயிட் அவ்ரிடி, கிறிஸ் கைல்ஸ், சர்வான் போன்றவர்களையே உச்சரித்துக் கொண்டிருக்கின்றது உலகம். இவர்கள் எதிரணிக்குச் சவாலாகவே அமைகின்றார்கள். இப்படி இருக்கையில், சனத் ஜெயசூரியாவின் பெயரை ஏன் உலகம் உச்சரிக்கத் தயங்குகின்றது.



பல சாதனைகளைப் படைத்த இலங்கை அணிக்குக் கிடைத்த சோதனையின் வேதனைதான் என்ன?

வருகின்ற பெப்ரவரி மாதம் தென்னாபிரிக்காவில் பெரும் கிரிக்கெட் போர் வெடிக்கப் போகின்றது. இதில் இலங்கையணி தென்னாபிரிக்கா அணியையும் சந்திக்கப் போகின்றது.

எனவே, இலங்கையணி மீண்டும் புத்துயிர் பெற வேண்டுமாயின், தனியே பந்து வீச்சாளர்களில் நம்பியிராமல் துடுப்பாட்டத் திறனையும் பெருக்கவேண்டும். இதற்காக சனத் ஜெயசூரியா, மஹேல ஜெயவர்த்தன, ரசல் ஆர்னல்ட் போன்றோர் புத்துயிர் பெற்று எழவேண்டும் அல்லது கில்கிறிஸ்ட், வீரேந்தர் ஷேவாக் போன்ற மின்னல் வேக ஆட்டக்காரர்கள் போல் இலங்கை அணியினர் விளையாட வேண்டும். இல்லையேல், இலங்கை அணி பின்தள்ளப்பட்டுவிடும் என்பதில் ஐயமில்லை. இலங்கையணிக்கு, உளவியல் ரீதியில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்ற நிலையை மாற்றினால் ஒழிய பிரச்சினையும் தீரப்போவதில்லை. ♣

- வி.ஏ.கோவி.

# கனவான்களின் அவதானத்துக்கு!

என்ன விலைகொடுத்தாவது வெற்றியைப் பெற்றுவிடவேண்டும் என்பது கிரிக்கெட் உலகின் தாரகமந்திரமாகப் போய்விட்டநிலையில், பரஸ்பரம் திட்டித்தீர்த்தல், சில உராய்வுகள் மேற்கொள்ளல், உளவியல் ரீதியாக மாற்று அணியினரை மனந்தளரச் செய்தல் என்றவாறான செயற்பாடுகளின் மீதான கண்டனங்கள் கடுமையாக முன்வைக்கப்படுகையில் - இன்னொரு வகையான குற்றச்சாட்டொன்றை ICE உயர் நிர்வாகி மல்கம் ஸ்பீட் முன்வைக்கின்றார். அதாவது, நடுவர்களை உரிய முறையில் வீரர்கள் களத்தில் கௌரவிக்காமை பற்றி எடுத்துக்காட்டுகின்றார். இது தொடர்பில் கிரிக்கெட் அதிகாரிகள் சரியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றார். மத்தியஸ்தப்பணி என்பது மிகவும் கடினமானது. சிந்தனையைச் சலனப் படவிடாது, மிகக் கூர்மையுடன் அவதானித்துச் செயற்படவேண்டியது. இந்நிலையில் நவீன இலத்திரனியல் கருவிகளின் பயன்பாடு-மத்தியஸ்தரை இன்னமும் இக்கட்டுக்குள் தள்ளுகின்றது. அதேவேளை, மத்தியஸ்தர்கள் வேண்டுமென்றோ, திட்டமிட்டோ பிழை விடுவதில்லை. எனினும், இயல்பாக மனிதன் விடும் தவறுகளுக்கு உட்பட்டுவிடுபவர்கள் என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பவர்கள். இந்நிலையில் வீரர்கள், எதிரணி ஆட்டக்காரர் அவுட்டாகிவிட்டார் என்று தாமாகவே (நடுவர் தீர்ப்பு வழங்க (முன்னமே) தீர்மானித்துக் கொண்டாடுவதும், அவுட் கொடுக்காவிட்டால்



எதிரணியினரை ஏசுவதும் மத்தியஸ்தரை அவமதிக்கும் செயலென்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இதில் இவ்வகை நோய்களைக் குணப்படுத்துவது மிக அவசியம் என்று சுட்டிக்காட்டும் மல்கம் ஸ்பீட், தீர்ப்பை ஏற்றுக் கொள்ளாமை என்பது மோசமான வியாதியாக இருக்கிறது என்கின்றார். மத்தியஸ்தர் தீர்ப்பு வழங்கினால், அதுவே முடிந்த முடிவு என்று மறுபேச்சின்றி ஏற்றுக்கொண்ட ஒரு காலம் இருந்தது. முந்திய தலைமுறை வீரர்கள் இது பற்றி ஆங்காங்கே ஆதங்கப்படுவதும், அந்தப் பண்பை மீறும் வீரர்களைக் கண்டிப்பதும் தற்போது நாம் காணும் காட்சி. பந்துவீச்சாளர்கள் தமது கேள்வியை மத்தியஸ்தரை நோக்கி உக்கிரமான பாணியில் எழுப்புவதும், மீள மீளக் கூக்குரல் இடுவதும் - சிலவேளை ரசிகர்களையே குழப்பி விடுவதும் உண்டு. அதேபோல, மத்தியஸ்தர் அவுட் கொடுத்தால் அதனை ஏற்று வெளியேறாது தாமதித்து நிற்றல், அல்லது மிகமெதுவாக வெளியேறி திரும்பத் திரும்ப மத்தியஸ்தரைப் பார்த்துக் கொண்டு செல்லல் - இப்படியாக, பல்வேறு சந்தர்ப்பங்களை எடுத்துக் காட்டலாம். இதில் ஒரு ஒற்றுமை என்னவென்றால் சர்வதேசக் கிரிக்கெட் அணிகள் எல்லாவற்றுக்கும் இது பொருந்தும். இதில் இருந்து விலக்குப் பெறமுடிந்தவர்களாக மிகக் குறைவான வீர்களே இருக்க முடியும். எனவே, மல்கம் ஸ்பீட் சரியான தருணத்தில் மிக அவசியமான விடயம் ஒன்றைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். இவற்றை ஏற்றுக்கொள்பவர்களையே கனவான்களாகக் கொள்ளமுடியும்.

- கண்ணா.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

*நல்ல ஆயன் இல்லாத மந்தைகளாகி...*

*- விவிலியத்திலிருந்து.*

# நமது நோக்கு

## வெட்கித் தலைகுனியுது யாழ்.குடாநாடு!

யாழ்.குடாநாட்டு மக்களே வெட்கித் தலைகுனியும் வண்ணம் - பாலியல் சார்ந்த குற்றச்செயல்கள் இங்கு அதிகரித்துவருவதை அண்மைய நாட்களாகக் காண முடிகின்றது.

தமிழினத்தின் ஒழுக்க வாழ்வும், தீயனவற்றைச் செய்ய அஞ்சும் தன்மையும் சிறப்புற்று வாழ்ந்த இந்த மண்ணில்- இத்தகைய கொடூரங்களைப் புரியும் மனித ஓநாய்களின் நடமாட்டங்களும் அதிகரித்து வருவது - கவலைக்குரியது மட்டுமல்ல, உடனடி நடவடிக்கைக்கும் அவசியமானதாகும்.

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயத்தில் கல்வி கற்றுவந்த, செ.துவாரகா என்னும் பத்து வயதேயான இளம்குருத்தொன்றின் மர்ம மரணத்தினூடான விசாரணையில் - அச்சிறுமி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டே படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இது தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

அதேவேளை - கடந்த மாதம் நடைபெற்ற பாலியல் வல்லுறவுச் சம்பவம் ஒன்று தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

17 வயதான இளம்பெண் ஒருவருக்கு, அவரது உறவினர் வீட்டிற்கு கூட்டிச்செல்ல உதவுவதாகக் கூறிய குடும்பஸ்தர் ஒருவர் - அப்பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளார்.

கோண்டாவில் பகுதியில், டிப்போவுக்கு அருகாமையில் நடந்த இச்சம்பவம் - நேற்றே வெளியுலகிற்கு வந்தது.

இந்த இரு சம்பவங்களையும் விட - குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எண்ணிக்கையிலான பாலியல் வல்லுறவுச் சம்பவங்களும், பாலியல் சார்ந்த குற்றச்செயல்களும் யாழ். குடாநாட்டில் அண்மைக்காலத்தில் நடந்திருப்பதாகவும் - அவை பல்வேறு காரணங்களால் மூடிமறைக்கப்பட்டு வருவதாகவும் - தெரியவருகின்றது.

இத்தகைய மிருகச் செயல்கள் - சீர்மிகுந்த சமுதாயமொன்றில் பெருகிவரும் அபாயம், புறந்தள்ளக்கூடியதொன்றல்ல.

கிருஷாந்தி குமாரசுவாமி, ரஜினி வேலாயுதம் என, மிலேச்சத்தனம் கொண்ட படையினரின் வெறித்தனத்துக்கு இலக்கான எம்மினப் பெண்களின் வதைபடு கதைகளின் தொடர்ச்சியாக - இன்று எமது சமூகத்திற்குள் வாழும், மனிதர்களாக உலாவிவரும் மிருகங்களின் உடற்பசிக்கு - இளம்பிஞ்சுகளும், பெண்களும் இலக்காகினறனர் என்றால் - எமது சமூகத்தின் மனிதநேயமும், சகோதரத்துவமும், பாதுகாப்பும் எங்கே போய்த் தொலைந்ததென்றே கதற வேண்டியிருக்கிறது.

எப்போது ஒரு பெண் நடு இரவிலும் பாதுகாப்பாகத் தனியாக நடமாட முடிகின்றதோ, அன்றே இந்தியா சுதந்திரமடைந்தது என ஏற்றுக் கொள்வேன் என மகாத்மா காந்தி கூறிவிட்டுப்போனபின்பு - அவ்வாறானதொரு சுதந்திரமும் பாதுகாப்பும் - இதே யாழ். மண்ணில் சில ஆண்டுகளுக்கு முன் நிலவியபோது - பெருமைப்பட்டும், மகிழ்ச்சியுற்றும் இருந்த உள்ளங்கள் - இன்றுள்ள நிலைமையை எண்ணி, வேதனையும், விரக்தியுமாக தளர்ந்து போகின்றன.

எங்களது சகோதரிகளை, எங்களது தாய்மாரைக் காக்கவேண்டிய இந்தமண் - இப்படியாக ஏன் சிதைகின்றது என்ற கேள்விகளே மனதைக் கிழித்து ரணமாக்குகின்றன.

அங்கொன்றும் இங்கொன்றுமாக- மனித மிருகங்களின் வெறித்தனத்திற்கு எம் சகோதரிகள் இரையாக்கப்படுகின்ற போது - எமது சமூகத்தின் ஒழுங்கும், பாதுகாப்பும் விடைதெரியாத வினாக்களாக எழுந்து வருகின்றன.

இந்த வெறித்தனமிக்க மிருகங்களுக்கு தகுந்த தண்டனை அளிப்பதோடு, எமது சமூகத்தின் நடத்தைகள் - உடனடியான, ஆழமான மீளாய்வு செய்யவேண்டிய கட்டத்திலிருப்பதை நாம் உணர வேண்டியவர்களாக உள்ளோம்.

எமது மண்ணில் தற்போது உருவாகிவரும் - பெண்களுக்கு எதிரான பாலியற் சேஷ்டைகள், அருவருக்கத்தக்க தெரு விமர்சனங்கள் - இவையெல்லாம் ஏற்படுத்தும் உளவியற் சீரழிப்புக்கள் - ஆரம்ப கட்டத்திலேயே தடுத்து நிறுத்தப்படவேண்டிய கட்டாயத்தை உணர்த்துவதாக இச்சம்பவங்கள் அமைகின்றன.

ஒரு புறம் கலாசாரத்தையே சீரழிக்கும் பழக்கவழக்கங்கள் எமது மண்ணுக்கு, திறந்த வீடுகளுக்குள் நுழையும் ஏதோ ஒன்றைப் போல - சகட்டுமேனிக்கு எடுத்து வரப்படுவது பற்றி - சமூகச் சிந்தையுள்ளவர்கள் உடன் கவனிக்க வேண்டும்.

பாலியல் வக்கிரம் கொண்ட இந்தப் பிறழ்வாளர்கள் ஏன் உருவாகின்றனர் என்பது கண்டறியப்பட வேண்டும். அவ்வாறு உருவாகுவதற்கான சகல காரணிகளும், எவ்வித தயக்கமுமின்றி தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

எவ்வாறு - எம் சகோதரிகள், தாய்மார் சுதந்திரமாகவும், பாதுகாப்புடனும் இந்த மண்ணில் உலா வந்தார்களோ - அதே சுதந்திரத்தையும், பாதுகாப்பையும் அவர்களுக்கு வழங்கவும் -

சமூகக் கட்டமைப்பைச் சீர்படுத்தவும் - அனைவருமே ஒன்று திரண்டு குரல் கொடுப்போம், செயற்படுவோம்.

# திட்டமிட்டபடி உபகுழுக் கூட்டங்கள் நடக்கும் என்கிறார் வெஸ்பேர்க்!

(கொழும்பு)

உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பான சர்ச்சைக்குத் தீர்வு காண்பது குறித்து நோர்வே, விடுதலைப் புலிகளுடனும் அரசாங்கத்துடனும் தொடர்புகொண்டுள்ளது எனக் கொழும்பில் உள்ள நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்த அவர், புலிகளுக்கும் இராணுவத்தரப்பிற்கும் இடையே மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பான விடயத்தில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் தெரிவித்தார்.

உபகுழுக் கூட்டம் திட்டமிட்டபடி நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்று தெரிவித்த அவர், மக்களை மீளக் குடியேற்றுவது தொடர்பான விடுதலைப் புலிகளினதும், இராணுவத்தினதும் யோசனைகள் நோர்வேக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றைத் தாம் பரிசீலனை செய்துவருவதாகவும் தெரிவித்தார்.

## டோறா மோதிய படகு நீதிமன்றில் ஒப்படைப்பு

தொண்டமனாறில் கடற்படையின் டோறா பீரங்கிப் படகினால் மோதுண்ட மீன்பிடிப்படகின் சேதமடைந்த பகுதிகள் மல்லாகம் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கடற்படையினரால் மீட்கப்பட்ட மேற்படி படகின் பாகங்களும், மீன்பிடி வலைகளும் காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுப் பின்னர் நேற்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (78)

## எஸ்.ரி.எவ். - புலிகள் பேச்சில் இணக்கமாம்!

### அதிரடிப்படைக் கட்டளை அதிகாரி கூறுகிறார்

(நமது நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் விசேட அதிரடிப்படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் புதிய கட்டடங்களில் முகாம்களை நிறுவுவது தொடர்பான இணக்கம் ஒன்று ஏற்பட்டிருப்பதாக விசேட அதிரடிப்படைக் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் குணதிலக தெரிவித்துள்ளார்.

அறுகம்குடா, பொத்துவில் ஆகிய இடங்களில் முகாம்களை அமைப்பதற்கான கட்டடங்கள் கட்டப்படுவதாகவும் விரைவில் இந்தக் கட்டடங்களுக்குப் படையினர் சென்றுவிடுவர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# திக்கம் வடிசாலை மீள் கையளிப்பு; அமைச்சரவையில் ஆராயப்படும்!

### எதிர்வரும் 9ஆம் திகதி முன்மொழிவு சமர்ப்பிப்பு

திக்கம் வடிசாலையைப் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியிடம் மீள ஒப்படைப்பதற்காக, அமைச்சரவை அங்கீகாரம் பெறுவதற்கான முன்மொழிவு எதிர்வரும் 9 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வடமராட்சி பனை, தென்னைவள அபிவிருத்திச் சங்கங்களின் கொத்தணியில் இருந்த வடிசாலை கடந்த ஒரு வருடத்துக்கு முன் இந்து கலாசார அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டு, பனை அபிவருத்திச் சபையின் நிர்வாகத்தின்கீழ் இயங்கி வருகின்றது.

திக்கம் வடிசாலையை மீளக் கொத்தணியிடம் சமர்ப்பிக்கக்கோரி வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் வலியுறுத்தி வருவதுடன் எதிர்ப்புப் போராட்டங்களையும் நடாத்தி வந்தது.

அமைச்சரவை அங்கீகாரத்துடன் இவ்வடிசாலை அரசினால் பொறுப்பேற்கப்பட்டிருந்ததால், உடனடியாக இதனை மீள ஒப்படைப்பதில் நெருக்கடி நிலை ஏற்பட்டிருந்தது.

தற்போது, திக்கம் வடிசாலையை மீளக் கொத்தணியிடம் ஒப்படைப்பதற்காக அமைச்சரவையில் அங்கீகாரம் பெறுவதற்கான முன்மொழிவு எதிர்வரும் 9 ஆம் திகதி இந்து கலாசார அமைச்சினால் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச,கி)

# உள்ஞரிலேயே குடியமர அனுமதியில்லை; வெளிநாட்டிலிருந்து திருப்பியனுப்புவதா?

### பிரித்தானிய தொழிற்கட்சி உறுப்பினர் கேள்வி

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களையே மீளக்குடியமர அனுமதிக்காத நிலையில், ஐரோப்பிய நாடுகளிலிருந்து இலங்கைத் தமிழர்களைத் திருப்பி அனுப்புவது அநீதியான செயல் என இலங்கையர்களை மேற்குலக நாடுகளிலிருந்து திருப்பி அனுப்புவதை எதிர்க்கும் அமைப்பின் தலைவரும், பிரித்தானிய ஆளும் தொழிற்கட்சி உறுப்பினருமான தவத்துரை ஜெயரஞ்சன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர்களின் மாநாட்டில் இவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது சம்பந்தமாக மேற்குலக நாடுகள் பலவற்றுடனும் தமது அமைப்பு தொடர்புகளை வைத்திருப்பதாகவும், நிரந்தர சமாதானம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு இயல்பு நிலை உருவாக்கப்படும் வரை- இலங்கையர்களை அந்த நாடுகளிலிருந்து திப்பி அனுப்புவதை ஒத்திவைக்குமாறு தான் கோரிருப்பதாகவும் தெரிவித்த அவர்- பிரித்தானியாவில் இது தொடர்பாக மாபெரும் கூட்டம் ஒன்றை நடத்த இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

# சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறி நேர்முகப் பரீட்சைக்கு தெரிவானோர்!

### நாளை அழைப்புக்கடிதங்களை பல்கலையில் பெறலாம்

(நமது நிருபர்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் 2003/2004 கல்வியாண்டுக்கான சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறிக்கு விண்ணப்பித்து- தகுதிகாண் பரீட்சையில் தகமை பெற்று, நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் நேற்று வெளியிடப்பட்டன.

இவர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு -

ஆர்.அபிதா, என்.அகிலன், ரீ.அனெற்காலின், எம்.அனுஜன், ஏ.அருள்சஞ்ஜீத், ரீ.பாலகுமாரன், எம்.பவானி, பீ.பிரவீனா, பி.ஞானேந்திரன், ரீ.ஜீவன், எஸ்.ஜெகன், ரீ.ஜெரிமில்ரன், எஸ்.ஜெயானந்தன்,

ஜே.யூஜித் சுஜிதா, ரீ.கபெஸ், சீ.கஜந்தன், ஆர்.கஜேந்திரா, வீ.ககுந்தன், எஸ்.கமலதீபன், வை.காங்கேசராசா, டீ.கருணாகரன், எஸ்.கஸ்தூரி, எஸ்.கவிதாசன், என். கேதீஸ்வரன், ரீ.லிவிங்ஸ்டன்,

வீ.லோகந்தன், ஏ.மயூரன், எஸ். மோகனராஜா, கே.மோகனதாஸ், ரீ.மோகன்ராஜ், கே.முகுந்தன், ரீ.முருகதாஸன், என்.நவநேசன், ரீ.நிருஜா, எஸ்.நீருபராஜ், கே.நித்தியாகரன், ஏ.பிலிப்றோய்,

ரீ.பிரணவன், என்.பிரசாந்தன், பீ.பிரசாத், கே.பிரசாத், ஜே.பிரதீபன், ஆ.புஸ்பராஜ், பீ.ராகுலன், ரீ.ரமேஸ்ரெஜினோல்ட், என்.ரஞ்சித்குமார், என்.செல்வகுமார், ஏ.சிறிகரன், ரீ.சுகந்தன், ஆர்.சுகந்தன்,

பீ.சுஜீப்குமார், எஸ்.சுமன், வீ.சுமன்ராஜ், ரீ.சுமன், கே.சுரேந்திரன், எஸ்.சுரேந்தர், கே. தினேஷ்குமார், ரீ.தர்மீகன், ரீ.தர்சிகா, என்.தயாபரன், பீ.திலகா, ரீ.திவ்யா, ஜே.தோமஸ் சிம்சன்,

ரீ.துஷ்யந்தன், ஆர்.உதயராஜ், ரீ.வசந்தகுமார், எஸ்.வத்சலா, வீ.வேணுகோபால், எஸ்.விஜயகுமார், எஸ்.விஜிதன், ஆர்.வினோதராஜ், ரீ.துஷியந்தினி, கே. காந்தரூபன், ரீ.சக்திவேல், வீ.மேரி ஸ்ரெல்லா ஆகியோரே நேர்முகப் பரீட்சைக்கு தெரிசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள்-நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக்கடிதங்களை நாளை காலை 10 மணிக்குப் பரீட்சைகளும் அனுமதிகளும் கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்படுபவர்களே கற்கை நெறியைத் தொடர அனுமதிக்கப்படுவர்

# பன்முனை எதிர்ப்புக்களையும் புறந்தள்ளி ஜே.வி.பியுடன் நெருங்குகிறார் சந்திரிகா!

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தை நாளையதினம் தாய்லாந்தில் ஆரம்பமாகிறது. இறுதியாக, ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் தமிழீழ விடுதலைப்புலிகளும், அரசாங்க தரப்பினரும் 'சமஷ்டி'த் தீர்வு முன்னெடுப்பு ஒன்றை இனப்பிரச்சி



னைத் தீர்வின் ஆராய்விற்காக ஏற்றுக்கொண்டிருந்தனர். அதனடிப்படையில், நாளை ஆரம்பமாகும் பேச்சுவார்த்தையில் சமஷ்டித் தீர்வின் அம்சங்கள் ஆராயப்படும் என இரண்டு தரப்பினரும் அறிக்கைகளை விடுத்திருந்தனர்.

எனினும், யாழ்ப்பாணக் குடாநாட்டின் அதியுச்சப் பாதுகாப்பு வலய முறுகல் முழுமையாகத் தீர்க்கப்படாத நிலையில், தாய்லாந்துப் பேச்சுவார்த்தையில் மக்களின் இயல்பு வாழ்க்கை குறித்தே பேசப்படவிருப்பதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

எது எப்படியிருப்பினும், தாய்லாந்துப் பேச்சுவார்த்தையில் அதியுயர் பாதுகாப்புவலயம் மற்றும் 'சமஷ்டி' பற்றி ஆராயப்படப் போவது உறுதியான விடயமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதான முன்னெடுப்பே தென்னிலங்கையில் தொடர்ந்தும் விமர்சிக்கப்படும் விடயமாக இருந்து வருகிறது. அதற்கு இடையில், சில சட்டச் சிக்கல்கள் தொடர்பாகவும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அவ்வாறான ஒரு விடயமே, தமிழீழ விடுதலைப்புலிகளுக்கான வானொலி உபகரண இறக்குமதியாகும். தமிழீழ விடுதலைப்புலிகள் உத்தியோகபூர்வமாக இந்த உபகரணங்களை இறக்குமதி செய்திருந்தாலும், அதில் நோர்வேயின் பங்கு ஜனாதிபதிக்கு எரிச்சலூட்டி விட்டது. ஏற்கனவே, சமாதான ஏற்பாட்டாளராகத் தம்மால் அழைக்கப்பட்ட நோர்வே, தம்மை நிராகரித்து வருவதாக ஜனாதிபதி முன்னர் ஒரு தடவை குறைகூறியிருந்தார்.

அந்தக் குறைகூறலைத் தவிர்க்கும் வகையில்- நோர்வேயின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியபோதும், ஜனாதிபதியின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படவில்லை. இந்த நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு வானொலி உபகரணங்களை இறக்குமதி செய்ததில் நோர்வேத் தூதுவரின் பங்கு "வியன்னா" ஒப்பந்தத்தை மீறும் செயல் என ஜனாதிபதி சுட்டிக்காட்டி, அந்த நாட்டின் பிரதமருக்கு அஞ்சல் ஒன்றை அனுப்பியிருந்தார். அதேநேரம், இலங்கையின் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவிடமும் ஜனாதிபதி விளக்கம் கோரியிருந்தார்.

இதற்குப் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளிக்கிழமை பதில் அனுப்பியுள்ளார். இதில், தமது அரசாங்கத்தின் நிலைப்பாட்டையும், அதில் நோர்வேயின் பங்கேற்பையும் அவர் நியாயப்படுத்தியுள்ளார். இது ஜனாதிபதியைத் திருப்திப்படுத்தப் போவதில்லை என்பது உறுதி.


ஏனெனில், ஜனாதிபதி இதனை ஏற்றுக்கொண்டாலும் அவருடைய பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து செயற்பட முனைத்திருக்கும், ஜனதா விமுக்தி பெரமுன அதனை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

தென்னிலங்கையில் தொடர்ந்து கொண்டிருக்கும் மற்றுமொரு பிரயத்தனம், அரசாங்கத்தை வீழ்த்தி தாம் ஆட்சிக்கு வரவேண்டுமென்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயற்பாடாகும். இதற்காகப் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு எதிராகப் பல வழிகளிலும் தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

இதற்கு வெளிநாடுகளின் ஆதரவு பூச்சிய நிலையில் இருந்தாலும்கூட- இனவாதம் கலந்த தேசியவாதத்தை முன்னெடுப்பதன் மூலம் ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சியை வீழ்த்தலாம் என ஜனாதிபதியின் கட்சி எண்ணம் கொண்டிருக்கிறது. அதற்காகத் தேசியவாதத்தைப் பேசி வரும், இடதுசாரி ஜனதா விமுக்தி பெரமுன எனப்படும் மக்கள் விடுதலை முன்னணியுடன் கைகோர்த்துக் கொண்ட பொதுஜன ஐக்கிய முன்னணி, பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகிறது.

ஏற்கனவே, இந்த இரண்டு தரப்புகளுக்கும் இடையில் ஒரு கட்டப் பேச்சுவார்த்தை நிறைவு பெற்றுள்ளது. இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை விரைவில் நடைபெறவிருக்கும் அதேநேரம், எதிர்வரும் வாரங்களில் ஒரு பொது உடன்பாடு ஏற்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், ஐக்கிய தேசிய முன்னணியை ஆட்சியில் இருந்து வீழ்த்த முனையும் பொதுஜன ஐக்கிய முன்னணி, மூன்று மாதங்களுக்குள் பிரச்சினை ஒன்றை எதிர்நோக்கும் வாய்ப்பைக் கொண்டிருக்கிறது. அதாவது, ஜனதா விமுக்தி பெரமுனவுடன் இணையும் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசிய முன்னணியில் இருந்து, ஆட்சிப் பெரும்பான்மைக்கானஉறுப்



பினர்கள் சிலரைக் கவர்த்திழுக்குமானால், சம்பந்தப்பட்ட ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களின் உறுப்புரிமை தொடர்பில் மூன்று மாதத்துக்குள் சிக்கல் நிலை தோன்றும்.

ஐக்கிய தேசிய கட்சியினால் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் விலக்கப்படுவார்களானால், மீண்டும் பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஜனதா விமுக்தி பெரமுனவின் கூட்டாட்சி வீழும் ஆபத்து இருக்கிறது. எனவே, பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசிய முன்னணியைத் தோற்கடித்து, மாற்று அரசாங்கம் ஒன்றை அமைக்கும்போது, பல்வேறு சவால்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியிருப்பது யதார்த்தமான விடயமாகும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி- ஜனதா விமுக்தி பெரமுனவின் ஆதரவுடன் ஆட்சி ஒன்றை நிறுவமுனையும் அதேநேரம், அதன் தோழமைக் கட்சிகள் தமது அதிருப்தி நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளன.

பிரதானமாக, பொதுஜன ஐக்கிய முன்னணியின் தோழமைக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சி இதில் முக்கியமானதாகும். அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் பட்டி வீரக்கோனுக்கு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்படாமையில் இருந்தே- ஜனாதிபதிக்கும், பட்டி வீரக்கோனுக்கும் இடையில் முறுகல் நிலவிவந்தது. அதன் தொடர்ச்சியாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தனிப்பட்ட கருத்துக்களைப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கருத்துக்களாக ஏற்றுக்கொள்ள முடியாது எனப் பட்டி வீரக்கோன் கூறிவந்தார். இந்த நிலையில், ஜனதா விமுக்தி பெரமுன, பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைவது பட்டி வீரக்கோனின் கோபத்தை இரண்டு மடங்காக்கியிருக்கிறது.

இதனால், ஆளும் ஐக்கிய தேசிய கட்சிக்கு நன்மைகள் வந்து சேர்ந்துள்ளன. உட்பூசல்கள் இருந்தாலும்கூட, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்குள் நிலவும் முறுகல்கள் தலைமைத்துவ உறுதியினால் அடங்கிப் போயுள்ளன. அதற்கு மாறாக, பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமைத்துவத்தின் உறுதியில்லாத தடுமாற்றக் கருத்துக்களால் அதில் நிலவும் உட்பூசல்கள் வெளிச்சத்துக்கு வருகின்றன.

அந்த வகையில், ஜனதா விமுக்தி

**தெற்குத் திசையினிலே...**

**கொழும்பிலிருந்து இந்திரஜித்**

பெரமுன எனப்படும் மக்கள் விடுதலை முன்னணியின் கொள்கைகள் எப்படியிருந்த போதிலும், உட்பூசல்கள் மற்றும் கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் என்ற விடயங்களில் தென்னிலங்கைக் கட்சிகள்- மக்கள் விடுதலை முன்னணியிடம் பாடம் கற்றேயாகவேண்டும்.

அண்மையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்திருந்தார். இதன்போது, பேசப்பட்ட விடயங்கள் பெரிதாக வெளிவராத போதும், இந்தச் சந்திப்பின்போது அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் வெளியிட்டதான கருத்து ஒன்று வெளியாகியிருந்தது. பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஜனதா விமுக்தி பெரமுன ஆகியன இணைந்து 110 ஆசனங்களை நாடாளுமன்றத்தில் பெறும் சந்தர்ப்பத்தில், அமைக்கப்படக்கூடிய மாற்று அரசாங்கத்துக்கு தமது கட்சி ஆதரவு வழங்கும் என அவர் தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த வேளையில், அரசாங்கத்தின் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இரண்டு பிரிவுகள், மலையக மக்கள் முன்னணி என்பன தொடர்ந்தும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்குத் தமது ஆதரவை வெளிப்படுத்தி வருகின்றன.

இந்த ஆண்டில் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு எதிராக மற்றொரு எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ளத் தயாராகி வருகிறது.

நாட்டின் இறைமை, பாதுகாப்பு, போன்றவற்றிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியதாகவும் மக்களின் வாழ்க்கைச் சுமையை அதிகரித்ததாகவும் குற்றஞ்சாட்டி- அமைச்சர்களான ஜெயலத் ஜயவர்த்தன, ரவி கருணாநாயக்க, திலக் மாரப்பன, ஜோன் அமரதுங்க, ராஜித சேனாரட்ன, ஜி.எல்.பீரிஸ் ஆகியோருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதேவேளை ஜனாதிபதியிடம் இருக்கும் காணி அமைச்சின் சில அதிகாரங்களைக் குறைக்கும் வகையிலான அரசாங்கத்தின் யோசனை ஒன்றை ஜனாதிபதி நிராகரித்துள்ளார்.

இவ்வாறாக, ஜனாதிபதிக்கும் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இடையிலான முறுகல்கள் தொடரும் அதேநேரம், பொதுஜன ஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி ஆகியவற்றின் கூட்டு, தற்சமயம் தென்னிலங்கையில் பரபரப்பை உருவாக்கியுள்ளது.

# அவருக்கு எதைக் கொடுப்போம்?

இன்று திருச்சபை, ஆண்டவரின் திருக்காட்சி விழாவைக் கொண்டாடுகின்றது. பாலகன் இயேசுவை வண



ங்க வந்த கீழ்த்திசை ஞானிகளின் வருகை, மீட்பு வரலாற்றில் ஒரு புதுத்திருப்பம். யூதருக்கு மட்டும் இயேசு அரசரன்று, மக்களினத்தார் அனைவருக்கும் அவர் அரசர், ஆண்டவர், மெசியா என்பதை சுட்டுகிறது இந்நிகழ்ச்சி. (மத்.2:1-12) இதனை வலியுறுத்தித் தூய பவுல் "நற்செய்தியின் வழியாகப், பிற இனத்தாரும் கிறிஸ்து இயேசுவின் மூலம் உடன் உரிமையாளரும் ஒரே உடலின் உறுப்பினரும் வாக்குறுதியின் உடன் பங்காளிகளும் ஆகின்றனர்" (எபே.3:6) எனக் கூறுகின்றார்.

இன்று மனிதன் பணத்தை, அதிகாரத்தை, செல்வாக்கை, அறிவை, புகழைத் தீவிரமாகத் தேடி, அதைத் தக்கவைப்பதே மனித வாழ்வு என நினைக்கின்றான். இன்றைய நவீன விஞ்ஞான தொழில்நுட்பங்களும், விளம்பரங்களும் இதற்குத் துணைபோகின்றன. இத

**ஞாயிறு நற்சிந்தனை**

னால், படைத்த இறைவனைத் தேட மறக்கின்றான், அவரது இருப்பை மறுக்கின்றான். ஆனால்- கீழ்த்திசை ஞானிகள்- அறிவாளிகளாக, செல்வந்தர்களாக, புகழ் பெற்றவர்களாக இருந்தபோதும், விண்மீனின் தோற்றத்தினூடாக இறைவனின் மகன் மெசியா பிறந்துள்ளார் என்பதை இனங்கண்டு, பல தடைகளைத் தாண்டி அவரைத் தேடிச்சென்று வணங்க பெத்தலகேமுக்குச் சென்றார்கள். அங்கே குடிலில் ஏழையாகப் பிறந்த பாலகன் இயேசுவை மீட்பராக ஏற்று, அவரைத் தெண்டனிட்டு வணங்கித் தம்மை முழுமையாகக் காணிக்கையாக்கித் தம் அன்பை வெளிப்படுத்தினார்கள். அவரது பணியின் அடையாளமாகப் பொன், சாம்பிராணி, வெள்ளைப் போளம் என்பவற்றைக் காணிக்கைப் பொருட்களாகக் கொடுத்தார்கள்.

எனவே, இயேசு இறைவனின் மகன், மனித குலத்தின் மீட்பிற்காக இறைவனால் அனுப்பப்பட்டவர், அவரே மெசியா, ஆண்டவர் என்பதை முழுமையாக ஏற்று, அவரை வணங்க எம்மிடம் 'தடைகளாக இருக்கின்ற- சுயநலம், ஆணவம், அகங்காரங்களைக் களைய நாம் தயாரா? காலத்தின் அறிகுறிகளினூடாக அவரது பிரசன்னத்தை எம் வாழ்வில் இனங்கண்டு கொள்ள எம்மால் முடியுமா? இயேசுவுக்காக எம் வாழ்வில் நாம் இறுகப் பற்றியுள்ள எல்லாவற்றையும் இழக்கத் தயாரா? தூய பவுலைப்போல் "கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள எல்லாவற்றையும் குப்பையாகக் கருத" (பிலிப். 3:8) மனதில் விருப்பம் உண்டா?

எம் வாழ்வில் எம் அன்பை முழுமையாக இயேசுவுக்கு காணிக்கையாகக் கொடுக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம். இயேசுவுக்குக் காட்டும் அன்பு வெறும் வார்த்தைகளால் அல்ல, மாறாகச் செயல்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். "நாம் சொல்லிலும் பேச்சிலும் அல்ல, செயலில் உண்மையான அன்பை விளங்கச் செய்வோம்" (1: யோவான் 3:18) சமுதாயத்தில் துன்பப்பட்டு உதவி வேண்டிநிற்கும் சின்னஞ்சிறு சகோதரர்களுக்கு உதவி செய்து, அன்பு செய்கின்ற போதெல்லாம் நாம் இயேசுவையே அன்பு செய்கின்றோம்.

பெத்தலகேமில் இயேசுவின் ஒளியைக் காணக் கீழ்த்திசை ஞானிகள் வந்ததுபோல, நம்மிலே நம்முடைய நடையுடை பாவனைகளிலே சொல் செயல்களிலே கிறிஸ்துவைக்காண, கண்டு அனுபவிக்க, பிறர் வர எம் வாழ்வு அமைய வேண்டும். இயேசு ஒரு குறிப்பிட்ட மக்களுக்கு உரியவர் அல்ல. அவர் எல்லோருக்கும் உரியவர். அவரைப் பிறருக்குக் கொடுக்க எம் வாழ்வு ஒரு நற்செய்தியாக அமையட்டும்.

**சகோதரன்**
**இ.பெ.தயாபரன்**

## இணுவிலில் திருவாசகவிழா

இணுவில் சைவத்திருநெறிக்கழக அறநெறிப் பாடசாலையின் ஆறாம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் திருவாசகவிழாவும், "அறநெறிக் களஞ்சியம்" நூல் வெளியீட்டு விழாவும் - இன்று பி.ப.2 மணிக்கு பாடசாலையின் அன்னதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் தர்மநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் - திருவாசகச் சிறப்புரையை இந்து சமயகலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கமும், 'அறநெறிக் களஞ்சியம்' நூல் அறிமுக உரையை ஆறு.திருமுருகனும், வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் திருமதி கலைவாணி இராமநாதனும் ஆற்றவுள்ளனர்.

## காணாமற்போனோர் உறவினர்கள் கொழும்பில்சந்திப்பு

(கொழும்பு)

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தினர்- பிரதமரின் செயலர், பாதுகாப்பு அமைச்சின் செயலா மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாகள் ஆகியோரை எதிர்வரும் 8ஆம் திகதி கொழும்பில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளனர்.

## சின்னஞ் சிறு செய்திகள்

### தென்மராட்சி பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள்

(மீசாலை)

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட 63 பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா தெரிவித்துள்ளார்.

கூடைப்பந்து உபகரணங்கள் 10 பாடசாலைகளுக்கும், வலைப்பந்து உபகரணங்கள் 19 பாடசாலைகளுக்கும், உதைபந்தாட்ட உபகரணங்கள் 29 பாடசாலைகளுக்கும், உயரம் பாய்தல் உபகரணத் தொகுதி 5 பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### உடற்கல்வி டிப்ளோமா மாணவருக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வெளியேறிய உடற் கல்வித்துறை டிப்ளோமா 2ம், 3ம் அணி மாணவர்களுக்கான கலந்துரையாடல்- நாளை 6 ஆம் திகதி காலை 9 மணிக்கு உடற் கல்வித் துறையில் நடைபெறும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

### சிறுவர்களுக்கான போட்டிகள்

(நல்லூர்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் இயங்கும் சமுர்த்திப் பயிற்சியாளர் குழுக்களுடன் இணைந்து, சிறுவர் பாதுகாப்பு நிறுவனம்- சிறுவர்களுக்கான பேச்சு, பாட்டு, கட்டுரை, கவியரங்கு ஆகிய போட்டிகளை இம்மாத இறுதிப்பகுதியில் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது.

'சமாதானத்தின் பின்பு சிறுவரின பார்வையில் யாழ்.மாவட்டம்', 'தற்போதைய கல்வி முறைமையால் சிறுவர் எதிர்நோக்கும் சவால்களும் தீர்வுகளும்', 'மாறிவரும் நவீன உலகிற்கேற்ப யாழ்.மாவட்டச் சிறுவர்கள் தயார்படுத்தப்படல்' ஆகிய தலைப்புக்களில் நடைபெறவுள்ள மேற்படி போட்டிகள்- கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளன.

வலயரீதியாக நடைபெறவுள்ள இப்போட்டி தொடர்பான மேலதிக விபரங்களை, பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சமுர்த்திப் பயிற்சியாளர்களிடம் பெற்றுக் கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (57)

### நிரந்தர வைத்தியர் இன்றி மிருசுவில் நோயாளர் சிரமம்

(மிருசுவில்)

மிருசுவில் அரசினர் வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படாததால் மக்கள் பலத்த சிரமமடைகின்றனர்.

நீண்டகால இடைவெளியின் பின்னர் அண்மையில் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கி வரும் மேற்படி வைத்தியசாலையை, நாளாந்தம் ஏராளமான நோயாளர் நாடி வருகின்றனர். நிரந்தர வைத்தியர் இல்லாமையால் வரணி வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்தியரே இங்கும் கடமைபுரிகின்றார். இதனால் பல மணிநேரம் நோயாளர் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

# புகுமுக மாணவர்களை நட்புடன் வரவேற்போம்!

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

பல்கலைக்கழகத்திற்கு பிரவேசிக்கின்ற புகுமுக மாணவர்களை, சிரேஷ்ட மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்திற்குள் உடல், உள ரீதியாகவோ துன்புறுத்தாது- நட்புறவுடன் அவர்களுடன் உறவாடி, சிறந்த கல்விச் சமூகத்தை உருவாக்கி, தமிழீழ மண்ணிற்கும் தமிழ் சமூகத்திற்கும் தொடர்ந்தும் சேவையாற்ற முன்வருமாறு, மாணவர் சமூகத்தை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. இது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில்-

சிரேஷ்ட மாணவர்களினால் புகுமுக மாணவர்களுக்கெதிராக உடல், உள ரீதியாக பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வகையில் மேற்கொள்ளப்படும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் யாவற்றிற்கும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்பதை அனைத்து மாணவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும், பல்கலைக்கழக வளாகத்துக்குள் பிரவேசிக்கும் அனைத்து பல்கலைக்கழகமாணவர்களும் நாளை முதல் தமது பல்கலைக்கழக அடையாள அட்டையை தவறாது எடுத்து வந்து பல்கலைக்கழக நிர்வாக செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பை வழங்குமாறும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### ஊனமுற்றோருக்கு லயன்ஸ் கழகம் உதவும்

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு ஊனமுற்றவர்களுக்கு சக்கர நாற்காலிகளை வழங்குவதற்கு திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகம் முன்வந்துள்ளது.

இதற்காக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலிருந்தும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 10 ஊனமுற்றோரின் பெயர் வபரங்களை அனுப்புமாறு- பிரதேச செயலர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (61)

## ஜேர்மன் நாடகக்குழுவின் அரங்க நிகழ்வுகள்

திருமறைக் கலாமன்ற ஏற்பாட்டில் இலங்கை வந்துள்ள ஜேர்மன் "ஹல்பேர்க்" நாடகக் குழுவினர் திருமறைக் கலாமன்றத்துடன் இணைந்து வழங்கும் அரங்க நிகழ்வுகள், எதிர்வரும் 10 ஆம் திகதி மாலை 3 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

ஜேர்மன் நாடகக் குழுவினர் வழங்கும் 'கனவுப்பெட்டகம்' (DREAM BOX) என்ற கறுப்பு அரங்க நாடகமும், இசை நிகழ்வும், அபிநய நிகழ்வும், மற்றும் தமிழ், சிங்கள, முஸ்லிம், ஜேர்மன் கலைஞர்கள் இணைந்து வழங்கும் "கண்ணுக்குத் தெரியாத சுவர்" என்ற மெளன நாடகமும் இடம்பெறவுள்ளன.

கடந்த 31 ஆம் திகதி இலங்கை வந்துள்ள இக்குழுவினரின் அரங்க நிகழ்வுகள்- நாளை மாலை 7 மணிக்கு கொழும்பில் ஆயர்கள் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போதிய தமிழ் ஆசிரியர்கள் இல்லை புத்தளம் பாடசாலைகளில் பகிஷ்கரிப்பு

புத்தளம் மாவட்டத்தில் உள்ள தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்யக் கோரி நடத்தப்படும் பாடசாலைப் பகிஷ்கரிப்புப் போராடடத்தினால், அங்குள்ள தமிழ்மொழி மூலப் பாடசாலைகள் செயலிழந்துள்ளன.

புத்தளம் மாவட்டத்திலுள்ள தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் சுமார் 800 ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன. சுமார் 36 ஆயிரம் தமிழ்மொழி மூலம் கல்வி கற்கும் மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையினால் மாணவர்களின் கல்வி பெருமளவு பாதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் கிராம புனரமைப்புக் குழுக்கள்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள, மீளக்குடியமர்ந்த கிராமங்கள்தோறும் கிராமப் புனரமைப்புக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

யாழ்.செயலகத்தில் கடந்த வாரம் நடைபெற்ற மாவட்ட மட்டத்திலான கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது. இப்புனரமைப்புக் குழுவில் கிராம சேவகர் உட்பட நான்கு அங்கத்தவர்கள் செயலாற்றுவர்.

புனர்வாழ்வு, அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும், நிவாரணங்கள், வீட்டுத்திட்டங்களுக்கு பயனாளிகளைத் தெரிவுசெய்தல்,அரச சார்பற்ற நிறுவனங்களின் கொடுப்பனவுகளுக்கு பயனாளிகளைத் தெரிவு செய்தல், மீளக்குடியமர்ந்த மக்களுக்குக் கொடுப்பனவுகள் போன்ற சகல விடயங்களையும் இந்தக் குழுவே கையாளும் எனத் தெரிய வருகின்றது. (17)

### தென்மராட்சி அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை பி.ப 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் சகல பாடசாலை அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா அறிவித்துள்ளார். (34)

### சாவகச்சேரியில் இலவச வைத்தியசேவை

(சரசாலை)

சாவகச்சேரி வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் தினமும் இலவச மருத்துவசேவை நடத்தப்பட்டு வருகின்றது.

தினமும் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நடாத்தப்படும் இவ் இலவச மருத்துவ சேவையால் பொதுமக்கள் பயனடைந்து வருகின்றனர். (34)

## லண்டன் மாநகரசபை உறுப்பினர் யாழ்.வருகை

லண்டன் மாநகர சபையின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் உரும்பிராயைச் சேர்ந்த போல் சத்தியநேசன் என்ற இவ்வுறுப்பினர் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ். மாநகரசபை அலுவலகத்துக்கு விஜயம் செய்தபின்னர், அங்கிருந்து புறப்பட்டுச் சென்று யாழ். நகரப்பகுதியின் நிலைமைகளையும், யாழ் நூலகத்தையும் பார்வையிட்டதுடன் யாழ். மாநகர சபை அதிகாரிகளுடனும் அவர் கலந்துரையாடினார்.

## சின்னஞ் சிறு செய்திகள்

### கிரனைட் வீச்சில் 6 முஸ்லிம்கள் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனையில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்ற கைக்குண்டு வீச்சுச் சம்பவத்தில், ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவர் உடபட 5 முஸ்லம்கள் காயமடைந்தனர்.

தமிழ், முஸ்லிம் மக்கள் வசிக்கும் அந்தப் பிரதேசத்தில் இச்சம்பவம் இடம்பெற்றதால், அந்தப் பிரதேசத்தில் பதற்றமான நிலை இருந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இனந்தெரியாத நபர்களால் வீசப்பட்ட இந்தக் கைக்குண்டுச் சம்பவத்தில் காயமுற்றிருந்த 3 பேர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### கசிப்பு வைத்திருந்தோருக்கு 50 ஆயிரம் தண்டப்பணம்

(யாழ்ப்பாணம்)

சட்ட விரோதமாக கசிப்பு உற்பத்தி செய்த, மற்றும் கசிப்பு வைத்திருந்த குற்றங்களுக்காக ஒன்பது பேர் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களுக்குத் தண்டப்பணமாக ஐம்பதாயிரம் ரூபாவும் தர்மப் பணமும் செலுத்துமாறு யாழ்.நீதிவான் விக்னராஜா உத்தரவிட்டார். (லி)

### ஊழியர் நலன்புரிச்சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர் நலன்புரிச்சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம்- நாளை திங்கட்கிழமை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஊழியர் நலன்புரிச்சங்கத்தின் தலைவர் சி.கே.பாலசுந்தரம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், சங்கத்தலைவர் ந.சிவஞானசுந்தரம், பொதுமுகாமையாளர் இராஜசிங்கம், சமாச வெளிக்கள உத்தியோகத்தர் க.தவச்செல்வன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர் -

பல்கலைக்கழக அனுமதிபெற்ற அங்கத்தவர்களுடைய பிள்ளைகள் இவ்வைபவத்தில் பாராட்டப்படவுள்ளனர். (ச)

### சமஷ்டிதொடர்பான கருத்தரங்கு

சமஷ்டி அரசியல் அமைப்புத் திட்டங்களின் பல்வேறு பரிமாணங்கள் குறித்த கருத்தரங்கு ஒன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் இக்கருத்தரங்கில்- தென்பகுதியில் இருந்து வருகை தரும் அரசியலமைப்பு வல்லுநர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

### வர்த்தக நிலையங்களுக்கு விடுமுறை நாள்

சகல வர்த்தக நிலையங்களையும் மீண்டும் சனிக்கிழமைகளில் அரைநாளும், ஞாயிறு, போயா மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் முழுநேரமும் பூட்டி ஊழியர்களுக்கு ஒய்வு வழங்க வேண்டுமென யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது.







குருநகர் மீன்சந்தையை மீளமைப்பதற்கு முன்னோடியாக அதற்கான பாதையை திறப்பது பற்றி படை அதிகாரிகள் ஆலோசனை செய்வதை முதற் படத்திலும், கரையோரப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவவேலி மற்றும் நடைபாதையை இரண்டாவது படத்திலும், வீதிகளைத் திறப்பது தொடர்பாக பிரதேச வரைபடத்தை ஆராய்வதை மூன்றாவது படத்திலும் காணலாம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland


# கொழும்பில் சாதாரணமாக பயன்படுத்தும் VSAT தொலைத்தொடர்புச் சாதனம்!

## இதற்கா எதிர்க் கூச்சல் என்கின்றனர் நிபுணர்கள்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் கொழும்பினூடாக இறக்குமதி செய்ததாக - ஜனாதிபதியாலும் எதிர்க்கட்சிகளாலும் பெருமெடுப்பில் பிரசாரம் செய்யப்பட்ட, VSAT ஒலிபரப்பு உபகரணம் -கொழும்பிலுள்ள குதிரைப் பந்தய மையங்களிலும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களாலும் மற்றும் வர்த்தகத்துறையினராலும் பயன்படுத்தப்படும் உபகரணமே என தொடர்பியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

நேரடியாக - ஒலி,ஒளி சமிக்ஞைகளைப் பெற்றுக் கொள்ளும் வசதி கொண்ட இந்த உபகரணம், இவ்வளவு தூரம் சாதாரண பயன்பாட்டிலிருக்கையில், இதனை விடுதலைப் புலிகள் சட்டவிரோதமாகக் கொண்டு செல்ல வேண்டியதில்லை. அவர்கள் மிக இலகுவாக இதனைப் பெற்றுக் கொள்ளலாம் என அந்த வல்லுநர்கள் தெரிவித்தனர். வளர்ந்து வரும் தொழில்நுட்ப உலகில் இவ்வாறு எதிர்க்கூச்சலிடுவது விஷயமறியாமல் பேசுவதை ஒத்ததே என அத்தொழில் நுட்பவல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.




# வெஸ்பேர்க் இடமாற்றம்; நோர்வே அதிகாரி மறுப்பு

(ஒஸ்லோ)

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் இடமாற்றம் செய்யப்பட்டு, அவருக்குப் பதிலாக ஹான்ஸ் பிறட்ஸ்கர் நியமிக்கப்படவுள்ளதாக, ஜே.வி.பி. சார்பு ஊடகங்களில் வெளியான தகவல்களை நோர்வே வெளிவிவகார அமைச்சின் அதிகாரி மறுத்துள்ளார்.

நோர்வே நாட்டின் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் இலங்கையிலிருந்து இடமாற்றப்படவில்லை. அவர் இன்னும் சிலகாலம் இலங்கையில் கடமைபுரிவார் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கைக்கான புதிய தூதுவராக ஹான்ஸ் பிறட்ஸ்கர் என்ற அதிகாரி நியமிக்கப்படவுள்ளார் என, ஜே.வி.பி. சார்பு ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இவர் ஐ. நாவின் மத்திய கிழக்கு, ஆசிய,பசுபிக் பிராந்தியத்துக்கான அரசியல் விவகார செயலாளராகப் பதவி வகித்ததாகவும் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

அத்துடன் இவர் தாய்லாந்துப் பேச்சுக்களின்போது, உடனிருந்து அதை உன்னிப்பாக அவதானிக்கவுள்ளதாகவும் அச் செய்தியில் கூறப்பட்டிருந்தது.

### குருநகர்...

யும் திறப்பதற்கு பிரிகேடியர் ரி.ரி. சில்வா இணக்கம் தெரிவித்தார்.

எனினும், குருநகர் தண்ணீர்த் தாங்கி வீதியைத் திறக்கும்படி அமைச்சர் மகேஸ்வரனும் வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தவரட்ணமும் கோரிக்கை விடுத்தபோதிலும், இவ்வீதியைத் திறக்க இராணுவத்தினர் இணக்கம் தெரிவிக்கவில்லை.

கடற்தொழிலுக்குச் செல்லத் திறக்கப்பட்ட இரு வீதிகளும், இன்று துப்புரவு செய்யப்பட்டு மீனவர்களின் போக்குவரத்திற்கு அனுமதிக்கப்படவுள்ளதுடன், சீநோர் தொழிற்சாலைக்கு அருகாமையிலுள்ள வீதிக்கு அருகில், கடற்தொழிலுக்குச் சென்று பிடிக்கப்படும் மீன்களை சந்தைப்படுத்துவதற்காக முன்னர் அமைந்திருந்த சந்தைக் கட்டடமும் இன்று துப்புரவு செய்யப்படவுள்ளது. (லி,ச)

### சிறான்...

35 மில்லியன் ரூபாவை இவ்வாறு மூலதன நிதியாக வழங்கியுள்ளது.

இதனைத் தொடர்ந்து, மேற்படி செயலகத்துக்குத் தேவையான அடிப்படை முலதனச் செயற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டவுள்ளன. தளபாடங்கள், காகிதங்கள் கொள்வனவு மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

### குடாநாட்டை...

தில் அரச அதிபர் தலைமையில் ஒரு விசேட நடவடிக்கைக்குழு நேற்று அமைக்கப்பட்டிருக்கின்றது.

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், கல்விப் பணிப்பாளர் உட்படப் பலர் இக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இவற்றைவிட, யாழ்.மாவட்டத்தின் அனைத்து பிரதேசசெயலர் பிரிவுகளிலும் பிரதேச மட்டத்தில் செயற்படும் வகையிலான நடவடிக்கைக்குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

அவ்வப்பகுதியின் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் உட்பட்ட பிரதேச மட்ட அதிகாரிகள் இக்குழுவில் அங்கம் வகிப்பார்கள். மேற்படி நடவடிக்கைக் குழுக்களின் செயற்பாடுகள் போர்க்கால அடிப்படையில் உடனடியாக ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. (க,லி )

# கிளிநொச்சியில் மீள்குடியேற்றம் நிதியுதவி வழங்க முடியாத நிலை!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவுக்கான முழுமையான நிதி ஒதுக்கீடு கிடைக்காமையால், மீளக் குடியமர்ந்த அனைத்துக் குடும்பங்களுக்கும் மேற்படி கொடுப்பனவு வழங்கமுடியாதநிலை தோன்றியுள்ளது.

கண்டி வீதி திறக்கப்பட்ட பின்னர், சுமார் பதினோராயிரத்து ஐந்நூற்றி இருபத்தேழு குடும்பங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்துள்ளன.

இவர்களில் இதுவரை ஆயிரத்து எண்ணூற்றி எண்பத்தெட்டு குடும்பங்களுக்கு மட்டுமே மீளக் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருக்கிறது.

அனைத்துக் குடும்பங்களுக்கும் மேற்படி 15,000 ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கு 172 மில்லியன் ரூபா தேவை. எனினும், இதுவரை 29 மில்லியன் ரூபா மட்டுமே கிடைத்திருக்கிறது. இதனால் ஏனைய குடும்பங்களுக்கு மேற்படி கொடுப்பனவை வழங்கமுடியாமல் உள்ளதாகத் தெரியவருகிறது. (க)

### மட்டு...

அலுவலகத்தைச் சுற்றிவளைத்தனர். தாம் அலுவலகத்துக்குள் தேடுதல் நடத்தப்போவதாகப் படையினர் புலிகளிடம் கேட்டபோது - புலிகள் அதற்கு இணங்கவில்லை. உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடிவிட்டே சோதனையிட அனுமதிக்க முடியும் எனப் புலிகள் கூறியுள்ளனர்.

பின்னர், புலிகளின் மட்டு அம்பாறை விசேட தளபதி அனுமதியளித்ததையடுத்து, சுமார் 4 மணி நேரம் நீடித்த இழுபறிக்குத் தீர்வு காணப்பட்டது. ஆயுதங்களின்றி உட்சென்று தேடுதல் நடத்துவதற்கு புலிகள் அனுமதித்தனர். ஆயுதங்களின்றி பொலிஸார் தேடுதல் நடத்திய போதும் கடத்தப்பட்ட நபர் அங்கு இருக்கவில்லை எனத் தெரியவந்தது.

தமது அலுவலகம் நள்ளிரவில் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டமை குறித்துப் புலிகள் தரப்பு அதிருப்தி வெளியிட்டிருக்கிறது.

இதேவேளை, கடத்திச் செல்லப்பட்ட லான்ஸ் கோப்ரல், கல்லடி அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்திலேயே தாம் தேடுதல் நடத்தியதாகப் படையினர் கூறியுள்ளனர்.(01)

## தாய்லாந்துப் பேச்சுக்கள்

# அரசியல் தீர்வுத்திட்டத்தின் ஆரம்ப அலசலாக அமையும்

தாய்லாந்தில் நாளை ஆரம்பமாகவுள்ள புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள், தீர்வுத் திட்டத்தின் ஆரம்ப அலசலாக அமையும் என அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

உலகிலுள்ள பல்வேறு சமஷ்டி முறைகள் தொடர்பாக இந்தப் பேச்சுக்களின்போது ஆராயவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாகவும் இந்தப்பேச்சுக்களின்போது விரிவாக ஆராயப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### வைரஸ்....

வரும் வைரஸ் காய்ச்சல் குறித்து ஆராய்வதற்காக மேலும் ஒரு மருத்துவ அதிகாரிகள் குழு யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளது.

அடுத்த வாரமளவில் மேற்படி மருத்துவ அதிகாரிகள் யாழ்ப்பாணம் விஜயம் செய்து, வைரஸ் காய்ச்சல் குறித்து தகவல்களைப் பெற்றுக் கொள்வார்கள். இக்காய்ச்சல் திடீரெனப் பரவக்காரணம் என்ன என்பது குறித்தும், உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் இக்குழுவினர் ஆராயவுள்ளனர். (க)

## முக்கிய செய்திகள்

### அபிவிருத்தி, புனர்வாழ்வு உபகுழுக்கூட்டம் 15,16ஆம் திகதிகளில்

(கொழும்பு)

வடகிழக்கு அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைக்கான உபகுழுக்கூட்டம் எதிர்வரும் 15,16 ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (க)

### முஸ்லிம்களுக்கும் சுயாட்சி பெறமுடியும் என்கிறார் ஹக்கீம்

(கொழும்பு)

அரசாங்கத்துடனும் விடுதலைப் புலிகளுடனும் பேசி, முஸ்லிம் மக்கள் வாழுகின்ற பிரதேசங்களில் தம்மைத்தாமே ஆளும் சுயாட்சி முறையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாளை ஆரம்பமாகும் தாய்லாந்துப் பேச்சுவார்த்தையில் அதியுர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகவே முக்கிய கவனம் செலுத்தப்படும் என்றும் -

இதன் காரணமாக முஸ்லிம் மக்களின் தீர்வு தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படமாட்டாது எனவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

**வாசகர்களே, வாடிக்கையாளர்களே**

நமது ஈழநாட்டில் விளம்பரம் செய்வதற்கு உங்களுக்கு அருகிலேயே இனி எமது விளம்பர முகவர்!

**நமது ஈழநாடு விளம்பர முகவர்**





சி.சதாநந்தன்
சரஸ்வதி தொலைத் தொடர்பு நிலையம்,
ஆடியபாதம் வீதி, கொக்குவில்.
தொலைபேசி இல. 222 3105
070-212220



**ஸ்ரார்கல்வி நிலையம்**
**சுன்னாகம்**
A/L 2005
கலை, வர்த்தக, கணித வகுப்புக்கள்
ஆரம்பம் 05-01-2003
ஞாயிறு 3.00 மணி
(087)

## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 19 - 01 - 1935

மறைவு 01 - 01 - 2003

எமது துறை இறுதி வருட மாணவியான
செல்வி.ப.தபோதினி அவர்களின் தந்தையார்
**திரு. முருகப்பா பழனியப்பன்**
01-01-2003 அன்று இறைபதமடைந்ததை இட்டு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, குடும்பத்தவரின் துயரில் பங்கெடுப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

5 ம் வருட மாணவர்கள்,
சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.
(088)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.